


# முத்திதழ்

MUTHTHITHAL
මුත්තිදළ්

நீ. நான்.. நாம்...

சிற்றிதழ் : 08

ஜனவரி – பெப்ரவரி 2022

முதுசத் தொகுப்பு

ISSN 2806-5123



Rs. 100/=

இரு மாத சிற்றிதழ்

A15 & A.C Road, Mutur

மாதாந்த இதழ்

# முத்திதழ்

முத்துப்படைப்புகளின் தொகுப்பு

SCAN ME

Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk Muththizhal.lk

## எம்மவர் ஆளுமைகளின் அடையாளம்

www.muththizhal.com | +94 740818782 | Mutur | Muththizhal










# முத்திதழ்

நீ, நான்., நாம்...

இதழ்–08, ஜனவரி / பெப்ரவரி 2022






Pages - 20
Size - A4
Location - Mutur
Category - Magazine
Layout By - Sanoos.tm
Adz Partner - MP News

**Online Mutur Library**



Contact - +94 740818782
Gmail - muththizhal.lk@gmail.com
Social Media - Muththizhal
Address - Jaya Road, Mutur.



**பிரதம ஆசிரியர்**

JUNAID MOHAMED IHSHAN

**பணிப்பாளர் சபை**

Abdul Cader Mohamed Asmy
Ajees Mohamed Rajees
Niyas Aasha Falin
Buhary Razeen Riza

**ஆலோசனைக் குழு**

*M.S. Amanullah (Retd. Principal)*
*Dr. A. Sathees Kumar (MBBS)*
*Ashseikh N.M. Nisath (Naleemi)*
*A.S. Mubarak (Retd. Librarian)*
*Mrs. Susana Munas (Teacher)*
*Mr. W. Mohamed Asmy*



தொழிநுட்பத்திறன், ஆக்கத்திறன் எது முதன்மையானது? - B.R.Riza — 07

74 சுதந்திர தினம் - M.S.M. Bisri — 10

முப்பது ரூபாய் - I.M. Nahfees — 04

மூதூர் படகு விபத்து - A.C.M. Asmy — 12

சேவை நலன் பாராட்டு - K.M. Nawas — 19

முத்திதழ் செய்திகள் — 17

நவரத்தினம் - N. Aasha Falin — 09

மூதூர் ஹறிஸ் பூங்கா - Mutur JMI — 15

நூல் அறிமுகம் - Abu Adheena — 19


Rs : 100/=

## ஆசிரியர் மடல்

ஜே.எம். இஹ்ஸான்
பிரதம ஆசிரியர்

நாடு பாரியதொரு பொருளாதார நெறிக் கடியை எதிர்நோக்கியுள்ளது. இந்நிலை யில் விவசாய உற்பத்தி மறை பெருமனத்தை எட்டி யுள்ள நிலையில் நெல்லுக்கான தட்டுப்பாட் டினால் நெல்லின் கொள்வனவுக்கான விலை தளம்பல் மூதூர் தொடக்கம் தேசிய ரீதியில் தாக்கம் செலுத்தியுள்ளது.

மறுபுறம் இஸ்தீரணம் அற்ற உள்நாட்டு அரசியல் மற்றும் வெளிநாட்டு அரசியல் நிலையினால் நாடளாவிய ரீதியிலான அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக அடித்தட்டு, இடைத்தட்டு மக்களின் வாழ்வியல் பெரிதும் சங்கட நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்கும் வேலைத்திட்டத்தில் கவனம் குவித்துள்ள அரசு சமாந்தமாக உட்கட்டமைப்பு அபிவிருத்தி யையும் மூதூர் பிரதேச செயலக எல்லையில் மேற்கொண்டு வருவது வரவேற்புக்குரிய விடயதானம். இந்நிலையில் பெப்ரவரி 4 ஆம் திகதியன்று மூதூரில் வெகு விமர்சையாக அரசு, தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவ னங்கள் தங்களின் சுதந்திர தின நிகழ்வை பொதுமக்களோடு கொண்டாடியதை அவதா னிக்க முடிந்தது.

பாடசாலை மாணவர்களுக்கான உயர் தரப் பரீட்சை நடாத்தப்பட்டுவரும் நிலையில் சடுதியாக கொரோனா, தொற்றுக் காய்ச்சலை கருத்திற்கொண்டு எல்லா பாடசாலைகளுக்கு பொது விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இருந்தும் உயர் தர பரீட்சாத்திகள் முடியுமான அளவிற்கு சுகாதார வழிமுறையை பின்பற்றி பரீட் சைக்கு சமூகமளித்துள்ளமை அவதா னிக்க முடிந்துள்ளது.

அண்மைய நாட்களின் மூதூரில் பெய்த தொடர்ச்சியான அடைமழை காரணமாக மூதூரில் சில பகுதிகள் திடீர் வெள்ள அனர்த்த நிலைமை உண்டாகியது. குறிப்பாக அரபிக் கல்லூரி வீதி, ஜாயா நகர் பகுதி மற்றும் ஆனைச்சேனையின் சில பகுதிகள் குறிப்பி டத்தக்கது. இந்நிலையில் முறையான வாடி கன்கள் மற்றும் பொருத்தமற்ற உட்கட்டமைப்பு, வீதி அபிவிருத்திகள் என்பவற்றினால் நீர் வழிந்தோடக்கூடிய அமைப்புகள் சீரற்று காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர். மேலும் இது தொடர்பில் பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் அவர் களுக்கு அறிவுறுத்தல் வழங்கியும் உடனடி தீர்வாக எதுவும் மேற்கொள்ளவில்லையும் குறித்த பகுதிவாழ் மக்கள் குற்றம் சாட்டியுள்ளத னையும் அவதானிக்க முடிந்தது.

முத்திதழ் சஞ்சிகையில் ஒருவருட நிறைவை முன்னிட்டு பிரதம ஆசிரியர் என்ற வகையில் எமது சஞ்சிகை குழுமம் சார்பில் வாசகர்களாகிய உங்களின் ஆதரவிற்கும், ஒத்துழைப்பிற்கும் நன்றிகளையும் பாராட்டு களையும் இவ்விடத்தில் சொல்லிக் கொள் வதில் பெருமிதம் அடைகின்றேன். தொடர்ந்தும் வாசகர்கள் இம்முயற்சிக்குப் பங்க ளிப்புச் செய்யவேண்டுமென்பதே எமது எதிர் பார்ப்பாகும்.

# தேசிய ரீதியில் கௌரவிக்கப்பட்ட

## எஸ்.எச்.அமீர் அவர்கள்




கொவிட் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் அர்ப்பணிப்போடும் நேர்மை யோடும் செயற்பட்டமைக்கான 'நேர்மைக்கு மகுடம் கொவிட் சாதனையாளர்' (COVID HERO) கௌரவத்தினை மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தராக பணிபுரியும் எஸ்.எச்.அமீர் (மூதூர் முறாசில்) பெற்றுள்ளார்.

தேசிய ரீதியில் கொவிட் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதில் அதி உன்னத பங்களிப்பை வழங்கியமைக்காக உயர் கௌரவத்தினைப் பெற்றுக் கொண்ட பத்துப் பேர்களில் இவர் ஒருவரே முஸ்லிம் உத்தியோகத்தர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொவிட் பரவல் அதிகரித்த கால கட்டத்தில் உயிர் அச்சுறுத்தல் மிக்க கொவிட் கட்டுப்பாட்டுச் செயற்பாட்டில் ஓய்வு, உணவு எதனையும் பொருட் படுத்தாது இரவு பகலென பாராது அயராது பணிபுரிந்து பொது மக்களின் ஆரோக்கிய வாழ்விற்காக முன்னின்று உழைத்தமைக்கு உயர் அங்கீகாரமாக இக்கௌரவம் கிடைக்கப்பெற்றுள்ளது.

எஸ்.எச். அமீர் அவர்கள் 1996ஆம் ஆண்டு இடம்பெற்ற துணை மருத்துவப் பிரிவு ஆட்சேர்ப்புக்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றி உயர் புள்ளிகளைப் பெற்று, திருகோணமலை மாவட்டத்தில் போட்டிப் பரீட்சை ஊடாக முதலாவது பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தராக தெரிவானதோடு களுத்துறை சுகாதார விஞ்ஞான தேசிய நிறுவகத்தில் ஓராண்டு பயிற்சியைப் பூர்த்தி செய்து 1999.04.01ஆம் திகதியன்று பொது சுகாதார வெளிக்கள உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார்.

பன்மைத்துவ புலமைத்துவமும் ஆளுமையுமிக்க இவர் தேசிய ரீதியில் ஆரோக்கியமான மற்றும் ஒழுக்கமான சிறந்த சமூக உருவாக்கத்தை மேற் கொள்வதில் பல்வேறுபட்ட பரப்புரைகளையும் ஆலோசனைகளையும் முன் வைத்து வரும் ஒரு சிந்தனைவாதியாவார்.

கதிர்வீச்சினால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை குறைத்துக் கொள்ளும் நோக்கில் தொலைத்தொடர்பு கோபுரங்களை அமைப்பதில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டல்களை ஏற்படுத்துவதிலும் அதனை கடுமையாகப் பின்பற்றச் செய்வதிலும் இவர் உன்னத பங்களிப்பைச் செய்துள்ளார்.

இலங்கை இந்திய அரசாங்கத்தின் ஆதரவில் மூதூர் சம்பூர் பகுதியில் சுற்றுச் சூழலுக்கு அச்சுறுத்தலாக அமையவிருந்த அனல் மின்சாரத் திட்டத்தை நிறுத்துவதில் வெற்றிபெற்ற மக்கள் பேராட்டத்தின் மூளையாக இருந்து செயற்பட்டவரும் இவரேயாவார்.

தேசியம் தழுவிய பல்வேறு விடயங்களுக்கு தமது பங்களிப்பை வழங்கிவரும் எச்.எச்.அமீர் அவர்களின் பணி மேலும் சிறந்தோங்க அல்லாஹ்வைப் பிரார்த் திப்பதோடு அவருக்கு எமது இதயபூர்வமான பாராட்டுக்களையும் மூதூர் மக்கள் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# 30 குறுந்திரைப்படம் முப்பது ரூபாய்

## ஐந்து தேசிய விருதுகள்




ஐ.எம். நபீஸ்
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
மூதூர்


மூதூர் பிரதேச செயலகத்தின் ஊடாக உலக சிறுவர் தின போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்ட **முப்பது ரூபாய்** குறுந் திரைப் படத்திற்கு ஐந்து தேசிய விருதுகள் கிடைக்கப்பெற்றன.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, பாலர் பாடசாலை, ஆரம்பக் கல்வி, பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கல்விச் சேவைகள் ராஜாங்க அமைச்சின் வழி காட்டுதலில் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தினால் " நம் கண்களால் நம் உலகம்" எனும் தொனிப்பொருளில் கோரப்பட்ட குறந் திரைப்பட போட்டியின் திறந்த பிரிவில் "அனைவருக்கும் கல்வி" என்ப தனை இலக்காக வைத்து கொண்டு புகாரி நளீரினால் இயக்கப்பட்ட முப்பது ரூபாய் குறுந்திரைப்படம் மூதூர் பிரதேச செயல கத்தின் ஒழுங்கு படுத்தல் ஊடாக தேசிய அளவில் இடம்பெற்ற சிறுவர் தினப் போட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இயக்குனர் நளீரின் கன்னி இயக் கத்தில் வெளியாகிய இக்குறுந்திரைப்படம் இயல்பு வாழ்வின் இயலாமையும், இலவசக் கல்வியின் நடைமுறை யதார்த்தத்தையும் உணர்வுபூர்வமாகவும், தத்ரூபமாகவும் சித்தரிக்கும் வகையில் ஒவ்வொரு காட்சியும் படமாக்கப்பட்டுள்ளது.

- மாறுபட்ட கதைக் களங்கள்
- நடிகர்களின் இயல்பான நடிப்புத் திறன்
- அற்புதமான காட்சி ஒளிப்பதிவு,எடிட்டிங்
- பிண்ணனிக் குரல் பொருத்தம்
- பிண்ணனி இசை கோர்ப்பு
- மண்வாசனையுடனான கதையாடல்
- கதாப்பாத்திரங்களின் பொருத்தப்பாடு
- கருத்தாழமிக்க கதை
- சிறந்த ஆரம்பம் நிறைந்த முடிவு என

அனைத்து பக்கங்களிலும் இயக்குனரின் வகிபாகம் பாராட்டத்தக்கது.

அனைவருக்கும் கல்வி என்ற அடிப்படை எண்ணக்கருவைக் கொண்டு 13 நிமிடங்களுக்குள் தயாரிக்கப்பட்ட சமூகச்சித்திர திரைப்படம் என்றுதான் வர்ணிக்கவேண்டும். புதுமுக இயக்குனர் என்று சொல்லும் அளவிற்கு குறைசொல்லிட முடியாத அளவிற்கு ஒவ்வொரு காட்சி அமைப்பையும் நுணக் கத்தோடு காட்சியமைப்பு ஒழுங்கு செய்துள்ளார் இத்திரைப்பட இயக்குனர்.

குறிப்பாக தாய், பெண் பிள்ளை இடையிலான உரை யாடல் அலாதியான செதுக்கப் பட்டுள்ளது இக்கதையில் இயல் பான ஊர் மொழிநடையோடு முக பாவனை, உதட்டு அசைவு, கதை நகரும் களம் மற்றும் செயட் பாட்டுடன் கூடியதான கதைப்பாங்கு என்பன வெகுவாக இயக்குனரும் சினிமா மற்றும் இலக்கியம் தொடர்பிலான ஆழ்ந்த புலமையை நிரூபிக்கின்றது.




சமகால சூழலில் சமூகத்தில் வெளியக தனியார் கல்வியில் உள்ள உண்மை நிலவரம் அது தொடர்பிலான இரு தரப்பு சாதக, பாதக நிலைப்பாடு தொடர்பில் பக்கச் சார்பின்றி நடுநிலை கண் ணோட்டத்தில் இத்திரைப்படத்தை வடிவமைப்பு செய்தமை உண்மையில் பாராட்டியாகவேண்டும்.

குறுந்திரைப்பட போட்டிக்கு நாடு முழுவதும் இருந்து 101 குறுந் திரைப் படங்கள் அனுப்பி வைக்கப்பட்டது. இவற்றுள் 12 விருதுகள் வழங்கப்பட்ட நிலையில் முப்பது ரூபாய் குறுந் திரைப் படத்திற்கு ஐந்து தேசிய விருதுகள் கொழும்பு BMICH இல் வைத்து வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.



இயக்குனர் புஹாரி நளீர்

**சிறந்த இயக்குனர் ஜூரி விருது :**
புஹாரி நளீர்

**சிறந்த படப்பிடிப்பு :**
காதர் முஹைதீன் பாரிஸ்

**ஜூரி சிறந்த நடிப்புக்கான விருது :**
தாரணி தாசன்

**சிறந்த தொகுப்புக்கான விருது :**
முஹமட் அஹ்ஷன்

**சிறந்த ஒலி அமைப்புக்கான விருதுகள் :**
புஹாரி நளீர்






## கிழக்கு மாகாண இளம் கலைஞர் விருது




மூதூர் பிராந்திய ஊடகவியலாளருக்கு ஊடகத்துறைக்கான கிழக்கு மாகாண இளங்கலைஞர் விருதுக்காக ஊடகவியலாளர் நஹீம் முஹமட் புஹாரி தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஊடகத்துறையில் இப்பிரிவின் கீழ் இவருக்கு மாத்திரமே இவ்வருடம் இவ்விருது வழங்கப்படவுள்ளது.

தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்றவற்றின் ஊடகவியலாளராக 14 வருடங்களாக செயற்பட்டு வருகின்றார்.

தேசிய இளைஞர் இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடாத்தப்பட்ட அறிவிப்பாளர் போட்டியில் இரு தடவைகள் தேசிய மட்டத்தில் 1 ஆம் இடத்தையும் அதே ஆண்டுகளில் மாவட்ட மட்டத்தில் 1 ஆம் இடத்தையும் இவர் பெற்றுள்ளார். அத்தோடு 2009 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கும் இவர் தெரிய செய்யப்பட்டார். 2011 ஆம் ஆண்டு முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சர் சி.தண்டாயுதபாணியினால் இளம் ஊடகவியலாளருக்கான நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சக்தி தொலைக்காட்சி மூதூர் பிராந்திய ஊடகவியலாளர் முஹமட் புஹாரி அவர்கள் 2021 ஆம் ஆண்டுக்கான இளம் கலைஞர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டமைக்கான வாழ்த்துகளை மூதூர் மக்கள் சார்பில் முத்திதழ் குழாம் தெரிவித்துக்கொள்கின்றது.

# முத்திதழ் வாழ்த்து

## NFGG அரசியல் கட்சியின் புதிய தவிசாளராக மூதூர் கே.எம்.எம்.ஸாஹிர்




நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் புதிய தவிசாளராக திருகோணமலை மாவட்ட மூதூரை சேர்ந்த வைத்தியர் கே.எம்.எம்.ஸாஹிர் அவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தேசிய அமைப்பாளராக சட்டத்தரணி பி.எம்.முஜீபுர் ரஹ்மான் அவர்களும் பிரதி தவிசாளராக பொறியியலாளர் எம்.ஏம்.அப்துர் ரஹ்மான் அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் ஏ.எல்.எம்.சபீல் நழீமி தெரிவித்துள்ளார்.

புதிய தவிசாளர் மற்றும் மூதூர் 3CD நிறுவனத்தின் பணிப்பாளரான Dr.KMM.Zahir அவர்களுக்கு முத்திதழ் சார்பிலான வாழ்த்துகள்.

## தெற்காசிய சாதனையாளர் நிப்ராஸ்

### மூன்று பதக்கங்கள் பெற்றார் இராணுவ தடகளப்போட்டியில்




2020/2021 ஆண்டுக்கான 57 ஆவது தேசிய இராணுவ தடகளப்போட்டியில் மூதூரைப் பிறப்பிடமாக கொண்ட ஆர்.எம்.நிப்ராஸ் அவர்கள் பின்வரும் போட்டிகளில் இரண்டு தங்கம் உள்ளடங்களாக ஒரு வெள்ளிப்பதக்கம் பெற்று மொத்தமாக மூன்று பதக்கங்களுடன் சாதனை படைத்துள்ளார்.

இதனடிப்படையில்,
1500 M **ஓட்டம் முதலாமிடம் பெற்று தங்கப்பதக்கம்.**
4 X 1500 M **ஓட்டத்தில் முதலாமிடம் பெற்று தங்கப்பதக்கம்.**
4 X 800 M **ஓட்டத்தில் இரண்டாமிடம் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் சுவீகரித்துள்ளார்.**

இவர் கடந்த ஆண்டு தெற்காசிய மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டியில் இலங்கை சார்பிலாக கலந்து 800அ ஓட்டப்போட்டியில் சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் பல சாதனை படைக்க மூதூர் மண் சாப்பிலான வாழ்த்துகள்.

## சேவைநலன் பாராட்டும் கௌரவிப்பும்

மூதூரில் கோவிட் 19க்கு எதிராகப் போராடி மக்களையும் தேசத்தையும் பாதுகாக்கும் உன்னதப் பணியில் ஈடுபட்ட அதுபோல் ஈடுபடுகின்ற அரச மற்றும் அரசசார்பற்ற 25 நிறுவனங்களைப் பாராட்டி கௌரவித்து ஊக்கப்படுத்தும் நிகழ்வு PDF நிறுவனத்தின் ஏற்பாட்டில் அனஸ் நூர் பௌண்டேஷனின் அனுசரணையில் நேற்று 2021.12.09ஆம் திகதி மூதூர் சஹ்றா மண்டபத்தில் நடைபெற்றது.

PDF அமைப்பின் தலைவர் ஜே.எம்.நிகாஸ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த அனஸ் நூர் பௌண்டேஷனின் பணிப்பாளர் அஷ்ஷெய்கு நூர் முகம்மத் அனஸ் (நளிமி) அவர்களின் கரங்களினால் நிறுவன பிரதிநிதிகளுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



## தேசியமட்ட இரண்டாமிடம் மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி மாணவி



மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரியில் பயிலும் க.பொ.த (சா.த) வகுப்பில் பயிலும் றமழான் பாத்திமா ஹிமா இம் முறை நடைபெற்ற தேசியமட்ட தாய் மொழி தின கட்டுரைப் போட்டியில் இரண்டாமிடத்தையும், மாகாண மட்டத்தில் முதலிடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார்.

2021-22 ஆம் ஆண்டில் இதுவரை மூதூர் முஸ்லிம் மகளிர் கல்லூரி இது வரை 20 க்கும் மேற்பட்ட தேசியமட்ட சாதனைகளை நிலைநாட்டியுள்ளமை விசேட அம்சமாகும்.

மேற்படி சாதனைகளுக்கு ஊக்கமளிக்கும், பெற்றோர்கள், பாடசாலை சமூகம் மற்றும் பாடசாலை அதிபர் ஆகியோருக்கு முத்திதழ் சார்பிலான வாழ்த்துக்களும், பாராட்டுகளும்.

# முத்திதழ் வாழ்த்து

## மாவட்ட கால்பந்து அணிக்கு மூதூரிலிருந்து நால்வர் தெரிவு

மூதூரில் இருந்து மாகாண அணித் தேர்விற்காக மாவட்ட ரீதியாக கந்தளாய் லீலாரத்ன மைதானத் திற்கு சென்ற 46 வீரர்களில் ஏற்கனவே தெரிவாகிய 6 வீரர்கள் உட்பட இறுதித் தேர்வில் மூதூரை சேர்ந்த 4 வீரர்கள் (A.Ifras - Reliance, L.Abdullah - victory, MN.Musarraf - Reliance, MNM.Nafees - Bahriya) தெரிவாகினர்.




கடந்த 15.01.2022 ஆம் திகதி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்ற மாகாண மட்ட தெரிவில் இந்நால்வரும் பங்கேற்றனர். இந்நிகழ்வில் மூதூர் கால்பந்தாட்ட தலைவர் Mohammed Rizan மற்றும் செயலாளர் Mohamed Azam மற்றும் உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்து மாணவர்களை ஊக்கப்படுத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

# மூதூரில் வெளியிடப்பட்ட நூற்கள்

### சங்கமம் கவிதை தொகுப்பு நூல்



**மூதூர் முஹைதீன்** எனும் புனைப் பெயருடைய தேசிய பிரபலமான கவிஞர் அபு சாலிஹ் மீரா முஹைதீன் அவர்கள் பிரதம ஆசிரியராக இருந்து 2005/2015 வரை வெளியிட்ட ஓசை எனும் காலாண்டு கவிதை சிற்றிதழ் 28 சஞ்சிகையில் இடம்பெற்ற 100 கவிதைகளை உள்ளடக்கிய கவிதை தொகுப்பு நூல் கடந்த(26) மூதூர் பொது நூலகத்தில் வைத்து வெளியீடு செய்யப்பட்டது.





### சங்கமம் கவிதை தொகுப்பு நூல்

2004.Dec.26 ஆம் திகதிய சுனாமி ஆழிப்பேரலை 17 வருட நினைவான டிசம்பர் 26 ஆம் திகதியன்று அனாமிகா பண்பாட்டு மையத்தால் மூதூர் சேனையூர் சாக் மண்டபத்தில் அனாமிகா பண்பாட்டு மையத்தின் தலைவர் திரு இரா.இராசரத்தினம் அவர்களின் தலைமையில் ஒன்பது நூல்கள் வெளியீடு செய்யப்பட்டன.





நூலாசிரியர்
பாலசிங்கம் சுகுமார்

### மூதூரின் முதுசங்கள் நூல் வெளியீடு

சிரேஷ்ட எழுத்தாளர். எம்.சீ.எம். ஷெரீப்f (SLAS) அவர்களினால் முகநூலில் எழுதப்பட்டு வந்த மூதூரின் முதுசங்கள் தனிமனித வரலாற்று ஆவணங்களின் ஒருபகுதி (170 நபர்களின்) வரலாற்றுக் குறிப்புகள் ஒன்று திரட்டப்பட்டு 588 பக்கங்களைக் கொண்ட மூதூரின் முதுசங்கள்-பகுதி-I நூல் வெளியீடு (19.02.2022) மூதூர் பேர்ல் கிராண்ட் மண்டபத்தில் நடைபெற்றது.



# தொழிநுட்பத்திறன், ஆக்கத்திறன்

## எது முதன்மையானது...?




B.R. Riza
Eastern University (R)


விஞ்ஞான உலகம் என்று கூறியவுடன் கேட்பவர் மனதில் வியப்பு வராவிட்டால் குற்றமாக நோக்கும் அளவிற்கு அதைப் பெரிதாகக் கருதுகிறோம். தொழிநுட்பச் சாதனங்களின் உதவிகள் இல்லையேன் உலகமும் இல்லையென அதை நம்பி வாழ்கிறோம். ஆதலால் முன்னோர்களின் அழகிய வரலாறுகள் தெரியாத இனமென்று காட்டுகின்ற வாய்ப்பேச்சுக்களும், செயற்பாடுகளும் எம்மில் நிறைந்து போயுள்ளன.

ஆம் நவீனத்தை நாமெல்லாம் இப்போதுதானே கண்டு கொண்டிருக்கின்றோம். பின்னொரு நாளில் நாம் நவீனம் என்றதையும் புராதணம் என்று பெயர் குறிக்கும் சமூகம் வரப்போவது ஒன்றும் ஆச்சரியமில்லை . எப்படியாயினும் நாம் சில விடயங்களின் யதார்த்த உலகிற்குள் பிரவேசித்து சில கறைபடிந்த சிந்தனைகளை சீர்செய்து கொள்வதே எல்லோரினது முன்னேற்றத்திற்கும் வழி வகுக்கும் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

இன்றைய நவீன சாதனங்களுடன் புழங்குகின்ற நாம் அவற்றின் தோற்றம் குறித்த உண்மைகளைத் தெரிந்தும் மறந்து போயிருக்கலாம். மனிதனின் ஆக்கத்திறன் கொண்ட செயற்பாடுகளை அதிகப்படுத்தவதற்காகவே சாதனங்களின் தோற்றம் உண்டாயிற்று. ஆனாலும் சாதனங்கள் இன்றி சாதனைகளே இல்லையென்ற தவறான ஒரு மகுட வாசகம் எல்லோர் மனதிலும் இடம்பிடித்திருப்பது கவலையான செய்தி.

வரலாறு தெரியாத, வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப் படிக்காத, அது பற்றிச் சிந்திக்காத யாருடைய மனநிலையும் இவ்வாறுதான் இருக்கும் என்பதில் சந்தேகப் பட ஒன்றுமில்லை. இன்றைய சாதனங்கள் செய்யும் சாதனைகள் என்று கூறிக் கொள்ளும் எந்த விடயமானாலும் எம்முன்னோர்கள் ஏதோ ஒரு விதத்தில் அதுபோன்ற அல்லது அதற்கு ஒத்ததொரு காரியத்தை செய்து சாதித்துக் காட்டியே உள்ளார்கள் என்பதை நிரூபிக்கும் எத்தனையாயிரம் ஆதாரங்கள் உலகில் பரந்து கிடக்கின்றது என்பதை யாவரும் அறிவோம்.

கடந்த காலங்களை நோக்குமிடத்து 2019இல், அக்டோபர் 25 ஆம் தேதி, திருச்சி மாவட்டம் மணப்பாறைக்கு அருகில் பிரிட்டோ ஆரோக்கியராஜ் மற்றும் கலாராணி ஆகிய தம்பதிகளின் சுஜித் வில்சன் என்ற இரண்டு வயதுடைய ஆண்குழந்தை ஓர் ஆள் துளைக் கிணற்றில் விழுந்து உயிருக்காகப் போராடிய வேளை அவதியுற்ற அவ்வுயிரைக் காப்பாற்றாத சாதனங்களும்(இந்தியா) , மார்ச் 2021-23 ஆம் திகதி புயலில் தடம்கவிழ்ந்து கரைபுரண்டு சூயஸ் கால்வாயை அடைத்து உலக வர்த்தகத்திலேயே தடை ஏற்படுத்திய எவர் கிவன் கப்பலை விரைவில் மீட்டெடுக்காத இயந்திரங்களும் (எகிப்து), இலங்கை தலைநகர் கொழும்பு துறைமுகத்துக்கு சில மைல் தூரத்தில் (3.ஜூன்.2020) நிறுத்தப்பட்டிருந்த சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட எக்ஸ்-பிரஸ் பேர்ல் என்ற தீப்பற்றி எரிந்த எண்ணெய் கப்பலை, கட்டுப்பாட்டில் கொண்டு வர பெரும் கிரயணத்தனம் எடுத்து தோற்றுப் போன தொழிநுட்பக் கருவிகளும் சாதாரண நேரத்தில் சுலபமான வேலைகளைச் செய்வதால் மட்டும் எப்படி அவற்றை சாதனைகள் என்று சொல்லிவிட முடியும்?

ஆயிரமாயிரம் ஆண்டுகள் என்று பின்னோக்கி நகர்ந்துசென்று வரலாறு படித்தால் அன்றைய சாதாராணங்களுக்கும், இன்றைய சாதனைகளுக்கும் மத்தியில் உள்ள பெரும் வேறுபாட்டைக் காண இயலுமாக இருக்கும். அன்று சாதாரணமாகச் செய்த பல்லாயிரம் அம்சங்கள் இன்று அதிசயமாகத் தெரிவதுதானே உண்மையான சாதனையாக இருக்க வேண்டும்?... ஆம் நமக்குள்ளேயே இதை அன்று எவ்வாறு செய்தார்கள், எப்படி செய்திருக்க முடியும், இவ்வளவு நுட்பங்கள் இவற்றில் இருக்கின்றனவே! என்ற வியப்பு நிறைந்த வினாக்கொத்துக்கள் பிறப்பது கூட அந்தச் சாதனைகளின் தத்ரூபமான ஆற்றலைக் கண்டதன் காரணமாகத் தோன்றாமல் மாற்றமாக இன்றைய சாதனங்களைப் பார்த்துப் பழகி இவற்றின் துணையின்றி எப்படிச் செய்திருக்க முடியும் என்பதனாலேயே நினைக்கத் தூண்டுகிறது.

இதற்கான அடிப்படைக் காரணம் துரதிர்ஷ்டவசமாக இன்று நாம் தொழில்நுட்பத் திறன், ஆக்கத்திறன் என்பவற்றுக்கிடையில் உள்ள வேறுபாட்டை அறியாமல் எமது சமூகத்தின் சிந்தனை ரீதியான பின்தங்கிய நிலைக்கு ஒருவகையில் ஒத்துப் போகின்றோம் எனச் சொல்லிவிட முடியும்.

ஆக்கத்திறன் என்பது எளிமையில் வல்லமை காட்டுவதாகும். இதைத்தான் முன்னோர்கள் செய்து காட்டினார்கள். அவர்கள் அடிப்படை அம்சமான ஆக்கத்திறனை தன்னகத்தே கொண்டிருந்தார்கள். அதை வளர்ப்பதற்கான வளர்ச்சிப் பாதைகளையும் அதற்கென அமைத்தார்கள். அவர்களுடைய ஆக்கத்திறன் எதையும் எளிமையான விடயங்களாகவே அவர்கள் முன் நிறுத்தின. ஆதலால் அவர்களால் எந்தவொரு விடயத்திலும் வல்லமை காட்ட முடியுமான ஒன்றானது.

எடுத்துக்காட்டாக ஸ்பானியா நாட்டில் அன்றைய மனிதர்களின் ஆக்கத்திறனின் வல்லமையை சான்று பயில்கின்ற ஒரு நீர் தடாகத்தின் அற்புதமான நிர்மாணம் இன்று எவ்வளவு ஆச்சரியமாகப் பார்க்கப்படுகிறது என்று தெரியுமா?... -ஸ்பெயினின் டோலிடோவில் உள்ள டாகஸ்- நதியுடன் தொடர்புபடுத்தி நிர்மாணிக்கப்பட்ட அந்தத் தடாகத்தில் சந்திரனின் வளர்ச்சி, தேய்விற்கு ஏற்ப நீர் கூடிக் குறைந்து கொண்டிருந்தது. பூர்ண சந்திரனின் போது முழுமையாக நிறையும் தடாகம் அமாவாசையின் போது ஒரு சொட்டுத் தண்ணீர் இன்றிக் காணப்படும் அளவிற்கு அவர்களுடைய ஆக்கத்திறன் அந்த நிர்மாணத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதனால் ஆக்கத் திறன் கொண்ட அவர்கள் வெறுமனே சாதாரணத்தில் மட்டுமே வல்லமை காட்டினார்கள் என்றில்லை. அவர்களுக்கு அனைத்துமே சாதாரணமாகத்தான் தெரிந்தது என்றே கூற வேண்டும்.

தொழில்நுட்பத் திறன் என்பது சிக்கலானவற்றில் வல்லமை காட்டுவது எனலாம். அதாவது இன்றைய சூழலில் ஒரு வேலையை அதிக காலம் கொடுத்துச் செய்வதையே மனிதன் சிக்கல் என்பதாகக் கருதுகிறான். ஆகவே தன்னுடைய காரியங்களை விரைவாகவும் அதிகமாகவும் செய்வதற்காக வேண்டி தொழில்நுட்பத் திறனை அதிகமாகப் பயன்படுத்த முயல்கிறான்.

இந்த இரண்டு மிகப்பெரும் விடயங்களுக்குப் பின்னால் அனைவரும் அறிய வேண்டிய உண்மை ஒன்று இருக்கிறது. அதுதான் உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் ஆக்கத்திறன் கொண்டவனாகவே பிறக்கின்றான்.இன்று பெரும்பாலான இடங்களில் தொழில் நுட்பத் திறனுக்கு பதிலாக மனித ஆக்கத்திறனை பயன்படுத்த சந்தர்ப்பம் கொடுத்தாலே முன்னைய சாதனைகள் கொண்ட நாகரீகம் ஒன்றைப் போல இப்போதும் ஒன்றை எளிதில் மீட்டுருவாக்கம் செய்துவிடலாம். ஆனாலும் தங்களிடம் மட்டுமே பணம் குவிய வேண்டும் என்ற குறுகிய சிந்தனையுடையவர்கள் மனித ஆக்கத்திறனைப் பயன்படுத்த முடியுமான இடங்களிலும் கூட தொழில்நுட்பத் திறன் கொண்ட சாதனங்களை நிறுவி வேலைவாய்ப்பற்ற ஏழை சமூகம் ஒன்றை உலகிற்கு தினம் தினம் உற்பத்தி செய்வதைப் பற்றி நாம் அனைவருமாகச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

# நேர்காணல்

நேர்கண்டவர் : இஹ்ஸான் ஜே.எம்.ஐ

- முழுப்பெயர் : அப்துல் சமது உபைத்துல்லா
- பிறந்த திகதி : 1955 .11. 30
- முகவரி : 672, நொக்ஸ் வீதி, மூதூர் 04.
- தந்தையின் முழுப்பெயர் : சுலைமான் அப்துல் சமது
- தாயின் முழுப்பெயர் : அப்துல் மஜீது அனிபா உம்மா.
- துறை : சிறுகதை



**அறிமுகம் :**

மூதூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜனாப் ஏ.எஸ்.உபைத்துல்லா அவர்கள் தனது ஆரம்பக் கல்வியை தி/ அல் -ஹிலால் மத்திய கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியை தி/மூதூர் புனித அந்தோனியார் மகா வித்தியாலயத்திலும் கற்று, பேராதனை பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பை நிறைவு செய்து ஆசிரியராக (22 வருடங்கள்) அதிபராக(15 வருடங்கள்) இருந்து முப்பத்தி ஏழு வருடங்கள் கல்வித்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

மிக எளிய மொழி நடையில் அன்றாட மக்களின் பிரச்சினைகளைப் பகிர்ந்து கொள்வதிலும், மூதூர் பிரதேசத்தின் வனப்பை மண் வாசனையுடன் பதிவாக்குவதில் இவரது படைப்புகள் முனைப்பு பெற்றுள்ளன.

## உங்களது இலக்கிய பிரவேசமும், அதில் நீங்கள் பெற்றுக்கொண்ட கௌரவங்கள்

1978 ஆம் ஆண்டு மாணிக்கம் என்னும் சஞ்சிகையில் "ஊர்வலம் " என்ற சிறுகதையை எழுதியதன் மூலம் இலக்கிய பரப்பிற்குள் பிரவேசித்தேன். தனது எழுத்தாற்றல் மூலம் மூதூர் மண்ணுக்கு பெருமை தேடித் தந்த அமரர் வ.அ. இராசரத்தினம் அவர்கள் தான் என்னை எழுத்துலகுக்கு அறிமுகப்படுத்தினார்.

நான் கங்கைக்காவியம் கவிதை நூல், (1997) "ஜலசமாதி "சிறுகதைத் தொகுப்பு, (2008) "நிழலைத்தேடி..."சிறுகதை தொகுப்பு (2017) ஆகிய இலக்கிய நூல்களோடு, நாகம்மாள் நாவல் ஒரு கண்ணோட்டம் ஆய்வு (1998), தமிழ் வளர்த்த பெரியார்கள் கட்டுரை தொகுப்பு (1999), இலகு வழித் தமிழ் இலக்கணம்(2000) ஆகிய தமிழ் தொடர்பான நூல்களையும் வெளியிட்டுள்ளேன்.

இலக்கியப் பணிக்காக இலங்கை இலக்கியப் பேரவை விருது(2004, 2007) கலாபூஷண விருது (2016), வித்தகர் விருது (2016) , துரைவி விருது (2016), கொடக்கே சாகித்திய விருது (2018) ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளேன்.

## வளர்ந்த எழுத்தாளர் என்ற வகையில் வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கு நீங்கள் முன்மொழியும் ஆலோசனைகள்..?

பொருளாதார சிக்கல்கள் மிகுந்துள்ள இன்றைய காலகட்டத்தில் எழுத்து நமக்கு சோறு போடாது. எழுதுவதற்கு முன்பு நமக்கான ஓர் தொழிலைத் தேடிக் கொள்வது அவசியமாகும்.

பழைய இலக்கியங்களைத் தேடிப் படிக்க வேண்டும். அத்தோடு நவீன சமகால இலக்கியங்களையும் அறிந்து கொள்ள வேண்டும். வாசிப்பு கலாசாரம் நம்மத்தியில் வெகுவாகக் குறைந்து வருகின்றது. நிறைய வாசிக்க வேண்டும். அப்போதுதான் நிறைய எழுத முடியும்.

ஒன்றை எழுத முன்பு ஏன் எழுதவேண்டும்? எப்படி எழுத வேண்டும்? எதற்காக எழுத வேண்டும்? என்ற அடிப்படை வினாக்களை மனதினில் உள் வாங்கிக்கொண்டு எழுதும் போதுதான் அது காத்திரமான அர்த்த புஷ்டியான இலக்கியமாக இருக்கும்.

நமது எழுத்தில் எப்போதும் ஓர் ஓர்மம் இருக்க வேண்டும் இலக்கியத்தை ஒரு தவமாகவும் யோகமாகவும் கொண்டு எழுதினால்தான் எழுத்துலகில் பிரகாசிக்க முடியும். கலை இலக்கிய பணியை முன்னெடுத்துச் செல்வதில் இளம் தலைமுறையினரின் பங்கும், பணியும், ஒத்துழைப்பும் போதுமானதாக இல்லை. எதிர்காலத்தில் இப்பணியினை முன்னெடுத்துச் செல்வதற்கு இவர்கள் முன்வரவேண்டும்.

## நீங்கள் சார்ந்திருக்கும் மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் செயற்பாடுகள் பற்றி

மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இலக்கிய முயற்சிகளிலும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றது. இதுவரை 25க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிடுவதற்கு அனுசரணை வழங்கி வந்துள்ளது.

நூல்களுக்கான அறிமுக கூட்டங்கள், விமர்சனக் கூட்டங்கள், இலக்கியக் கருத்தாடல்கள், பாராட்டு பரிசளிப்பு வைபவங்கள், இலக்கிய போட்டிகள் என பல்வேறு இலக்கியப் பணிகளில் தம்மை ஈடுபடுத்தி வந்துள்ளது.

மறைந்த முதுபெரும் எழுத்தாளர் வ.அ. இராசரத்தினம் அவர்களின் பெயரில் அகில இலங்கை ரீதியாக சிறுகதை போட்டி ஒன்றினை நடத்தி பரிசு வழங்கியுள்ளோம். மற்று மொரு அகில இலங்கை ரீதியான கவிதைப் போட்டி ஒன்றை ஒன்றினை நடத்தி பரிசு வழங்கியுள்ளோம்.

'முத்தூர் முரசு' என்ற கையெழுத்து சஞ்சிகை வெளியிட்டதோடு "ஓசை" என்ற கவிதைச் சிற்றிதழையும் வெளியிட்டுள்ளோம். ஞானம் சஞ்சிகை தேசிய ரீதியில் நடத்திய இலக்கிய போட்டிகளில் சிற்றிதழ்களுக்கான பிரிவில் ஓசை கவிதை சிற்றிதழ் ஆறுதல் பரிசு பெற்றுள்ளது.

இவ்வாண்டு மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தின் வெளியீடாக கவிஞர் மூதூர் முகைதீன் சங்கமம் கவிதைத் தொகுப்பு, எம்.சீ.எம். ஷெரீபின் மூதூரின் முதுசங்கள், கவிஞர் எம்.ஏ. பரீதின், நன்னெறிச்சிலம்பு அ.இராசேந்திரத்தின் தழும்புகள் ஆகிய நூல்கள் வெளிவரவுள்ளன.

## நீங்கள் சிறுகதை எழுத்தாளர் என்ற வகையில் உங்களது "ஜலசமாதி" சிறுகதை பற்றி அதிகம் பேசப்படுவது குறித்து.

1993 ஆம் ஆண்டு நடைபெற்ற மூதூர் பயணிகள் படகு விபத்து துயரச் சம்பவம் எல்லோரையும் போல என்னையும் பாதித்தது. அதனை ஆவணமாக்கி விட வேண்டும் என்று நினைத்து, "ஜலசமாதி" என்ற பெயரில் படகு விபத்தில் மரணமடைந்த எம். எம். றெசீன் அவர்களை கதாநாயகனாகக் கொண்டு இச்சிறுகதையை எழுதினேன்.

இச்சிறுகதை தினகரன் வாரமஞ்சரி 1999 ஆம் ஆண்டு முதன் முதலில் பிரசுரமானது. கலை அழகுடன் யதார்த்தத்தை சித்தரிக்கும் இச்சிறுகதை எனக்கு பேரையும், புகழையும் , பரிசையும் பெற்றுத் தந்துள்ளது. மூதூர் படகு விபத்து குறித்துப் பேசும் போதெல்லாம் ஜலசமாதி சிறுகதை பற்றியும் பேசப்படுகின்றது.

இக்கதை சங்கமம், ஜலசமாதி சிறுகதைத் தொகுப்பு, கல்வி அமைச்சின் "கூர்மதி", கிழக்கில் 100 சிறுகதைகள், கனக செந்தி கதா விருது பெற்ற சிறுகதைத் தொகுப்பு ஆகியவற்றில் மீள்பதிப்புச் செய்யப்பட்டுள்ளன.

## இலக்கியப் பரப்பில் பெண் எழுத்தாளர்களின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது?

ஆண் எழுத்தாளர்களை போன்று பெண் எழுத்தாளர்களால் இலக்கிய உலகில் நீண்ட காலம் நிலைத்திருக்க முடிவதில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் பெண்களின் குடும்பச் சூழலும் பொறுப்புகளுமாகும். ஆண்களைப் பொறுத்தவரையில் குறிப்பிட்ட வேலைகளுடன் நின்றுவிடுவார்கள். பெண்கள் அவ்வாறில்லை நாள் முழுவதும் குடும்பத்துக்காக உழைக்க வேண்டியிருக்கிறது.

பல்வேறு தடைகளையும் தாண்டி அவர்கள் எழுதுவது சற்று கடினம்தான். ஆனால் இன்று விரல்விட்டு எண்ணக்கூடிய பெண் எழுத்தாளர்களே நம்மத்தியில் காணப்படுகின்றனர். எதிர்காலத்தில் இத்தடைகளைத் தாண்டி மீண்டும் அவர்கள் எழுத்துலகில் பிரவேசிக்க வேண்டும் என்பது எனது அவா.



அப்ராஸ் ஏ.ஜப்பார்

# (நிகழ்) காலம்

சுல்தான் மாமாவுக்கு தான் எங்கு இருக்கிறேன் என்றுகூட அறிய முடியாதளவு தலை இருட்டிக்கொண்டு வந்தது. ஒருவாறு தன்னை சுதாகரித்துக்கொண்டு கையிலிருந்த போத்தலிலிருந்து சிறிது நீரை குடித்துவிட்டு முகத்தையும் கழுவிக் கொள் கிறார். இப்போது பரவாயில்லை என்று தனக்குள் சொல்லிக் கொள்ள அவரால்முடிகிறது.


சரி எனக்கு ஏன் ஒரு நாளும் இல்லாத மாதிரி தலை இருட்ட வேண்டும் என மீண்டும் ஒரு தரம் யோசிக்க தலைப்படுகிறார். காலையில் கிளினிக் போவதற்காக பஸ் ஸடிக்கு வந்தது இப்போது ஞாபகத்திற்கு வருகிறது. சரிதான் நாம வந்த நேரம் பஸ் போயிட்டு. டைமுக்கு போகாட்டி லைன்ல நிக்கனும். சில நேரம் கிளினிக்கும் கிடைக்காம போயிடும்.

இப்ப எல்லாத்துக்கும் போலின் தானே. வீதியால் வந்த ஆட்டோவுக்கு கை காட்டுகிறார். ஆட்டோவும் நிற்க. தம்பி மல ஆஸ்பத்திரிக்கு போகனும் என்று சொல்லி ஏறியது முதல் அடுத்தடுத்து நடந்தவை போலின் போல் தொடராக நினைவுக்கு வந்தது. சரிதான் அவசரத்துல எதுவும் சாப்பிடாம வந்ததுல தல சுத்து வந்திருக்கும். இல்லையே நான் பகல் வர சாப்பிடாம இருப்பேனே. நடந்தவைகளை போலினாக தனக்குள் சொல்லிப் பாக்குறார்.

ஆட்டோகாரன் எரக்கிட்டு 1500/- கேட்டான். இல்லையே தம்பி. நீங்க கூட கேக்குறீங்க என்று சொன்னதும் எந்த ஒலகத்துல மாமா இரிக்கீங்க என்று கேட்டதோடு மட்டுமில்லாமல் பெட்டோல் விலை ஏற்றம் தொடக்கம் நாட்டில் நடக்கும் முஸ்பாத்திகளை சிரித்துக் கொண்டே சொன்னான். நான் ஒங்கட்ட கேக்காம ஏறுனது என்ட தம்பு தான் என்று சொல்லி தன்னிடம் இருந்த 500/- ரூபாவை கண்கலங்க கொடுத்ததோடு இனி திரும்பி போரதுக்கு. கால. பகல் சாப்பாட்டுக்கு என்ன செய்ற என்று யோசித்ததை மீட்ட முடிகிறது.

அப்போது சுத்த தொடங்கின தல தான்.மருந்து தட்டுப்பாட்டுப்பாடா இருக்கு பாமசில வாங்கி குடியுங்கோ என்று டொக்டர் சொல்லி எழுதிக் கொடுத்ததப் பார்த்ததும் சுற்றல் இருட்டலாக டெல்டா ஒமிக்ரோனாக மாறியது போல் மாறியிருந்தது மாமாவுக்கு...!

# மஞ்சள் மாத்திரை



சர்ஜூன் தௌபீக்

வேலைவிட்டு வரும் சலீமிற்காக வாசற்படியில் எப்போதும் காத்திருக்குப்பது மின்பாவின் வழக்கம். அவன் வீட்டிற்குள் வரும் போதும் வேலைக்குச் செல்லும் போதும் வாசலில் வந்து நிற்பதனை ஒரு சடங்கு போன்றே தினமும் தவறாது செய்தாள் மின்பா. ஆறுமாத கர்ப்பிணியாக இருந்தும் கூட அவளால் இந்த வழிபாடு போன்று மாறிப்போன ஒரு செயற்பாட்டை தினமும் செய்யாதிருக்க முடியவில்லை. “ஏன் பொட்ட இவ்வளவு கஷ்டப்பட்டு நடந்து திரியிர காலமயோட?” என்று மின்பாவின் உம்மா கடிந்து கொண்ட போதும் அவள் அதனைப் பொருட்படுத்தவில்லை. அனைத்து கஷ்டங்களையும் மிகைத்துவிடுவது உண்மை அன்பின் வெளிப்பாடு என்று உம்மாவிற்குத் தெளிவுபடுத்த மின்பா முயற்சித்ததே இல்லை.

அன்றும் வழமைபோல வேலை முடிந்து சலீம் வீடு வந்தடைந்தான். வழக்கமாக நிறுத்தும் இடத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு நெற்றியில் படர்ந்திருந்த வியர்வைத்துளிகளை சுட்டு விரலை தாக்கத்தி போல வலைத்து துடைத்து விட்டுப் படிக்கட்டைப் பார்த்தான். அங்கே மின்பாவை அவன் காணவில்லை. தனது அறையின் கதவை மெதுவாகத் திறந்து உள்ளே நுழைந்த போது ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கி அவன் வீடு வந்தது கூட அறியாதவளாக கட்டிலில் அமர்ந்திருப்பதனைக் கண்டான். “என்ன செய்றிங்க?” என்று அவளைப் பார்த்துக் கேட்டான். கனவிலிருந்து மீண்டு வந்தவள் போல கண்ணைக் கசக்கியபடி “காலமய்ல இருந்து வயிறு நோக்காடா இரிக்கி. ஒரு தரம் டொக்டர்ட போய் வருவமா?” என்று மட்டும் கேட்டாள்.

“உம்மா எங்க போய்ட்டாக?”

“ஹஸீனா சாச்சிட்ட போய்க்காக.”

“அப்ப ரெடியாவுங்க போய் வருவோம்.” என்றான் சலீம்.

நொடிப்பொழுதில் தயாராகி முன் வந்து நின்றாள். அவளின் பதட்டத்தை அறிந்த சலீம் ஆறுதல் சொல்லி தைரியம் தரும் ஆசுவாச வார்த்தைகள் பேச முயற்சித்துத் தோற்றுப் போனான். மனதும் நீரைப் போன்றது தான். தெளிவடைய நேரம் மட்டுமே இரண்டிற்கும் துணைபுரிகின்றது. ஆனால் நாம் தான் எம் தவறான புரிதலால் வார்த்தைகளைக் கொண்டு கலங்கிய உள்ளங்களைத் தெளிவடையச் செய்ய முயற்சிக்கிறோம்.

அந்த வைத்தியரிடம் எப்படியோ காட்டிவிட வேண்டும் என்று ஒரு மணித்தியாலத்திற்கு மேல் காத்திருந்து கடைசியில் அவரிடம் பிரச்சினையை பதட்டத்தோடு கூறினாள். ஆனால் வைத்தியரோ எந்தச் சலனமும் இன்றி “இந்த ரெண்டு டெப்லட்டையும் போடுங்க சரியாகிடும்.” என்று மஞ்சள் மற்றும் வெள்ளை நிற இரண்டு மாத்திரைகளை மடித்துக் கொடுத்தார். பிரச்சினை எதுவும் இல்லை என்று சலீம் முழுமையாக நம்பினான். ஆனால் வீடு வந்து மாத்திரைகளைக் குடித்து பின்னரும் வலி குறைவடையாத போது, அவரால் எப்படி என் வயிற்றைக் கூட பார்க்காமல் ஒன்றும் இல்லை என்று சொல்ல முடிந்தது என்ற சந்தேகம் தொடர்ந்து கொண்டே இருந்தது. இதனை சலீமிடம் கூறியபோது அவன் “அது தான!” என்று ஆச்சரியம் கலந்த தொணியில் சொல்லிவிட்டு தனது அலுவலக வேலையில் மூழ்கிப் போனான்.

அன்றிரவு பூராகவும் மின்பாவினால் ஒரு நிமிடமேனும் தூங்க முடியவில்லை. தனது அடிவயிற்றின் வலி குறைந்திருந்த போதிலும் தான் சுகமாகத் தான் இருக்கின்றேன் என்பதனை அவளால் உறுதிப்பட நம்பமுடியவில்லை. ஏதோ ஒரு ஊசலாட்டம் மனதில் குழப்பத்தை ஏற்படுத்திக்கொண்டே இருந்தது. விடியற்காலை முதல் வேலையாக சலீமிடம் சொல்லி வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று வைத்தியரிடம் காண்பித்தாள். அவர் பரிசோதனை ஒன்று செய்வதற்காக எழுதிக் கொடுத்து விட்டு அதன் அறிக்கையை கொண்டு வந்து சமர்ப்பிக்கும் படி சொன்னார்.

சலீமிற்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. நாம் ஏன் வைத்தியசாலைக்குள் சென்றால் இத்தனை தூரம் பயப்படுகின்றோம் என்று அவனால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. இல்லை இது எல்லோருக்கும் ஏற்படும் பொது உணர்வா என்று சந்தேகித்துக் கொண்டான். எவ்வளவு அறிவு நிறைந்தவராக இருப்பினும் இங்கு வந்தால் அனைத்தையும் மறந்து மடமை சூழப்பட்டவர் போல் ஏன் நாம் நடக்கின்றோம் என்பது சலீமால் மட்டுமல்ல பலரால் விடை காணப்படாத ஒரு புதிர் தான்.

“வெளிய நில்லுங்க! நீங்க உள்ள வர ஏலா.” என்று சொல்லிய படி கதவை முகத்திற்கு எதிரே அடித்து மூடிவிட்டு மின்பாவை உள்ளே அழைத்துச் சென்றாள் ஒரு தாதி. அவனைப் போல பல ஆண்கள் தங்கள் மனைவியரை உள்ளே அனுப்பிவிட்டு காத்திருந்தனர். உள்ளே என்ன செய்கிறார்கள் என்று ஒன்றும் புரியாதவனாக அங்கும் இங்கும் நடக்க ஆரம்பித்தான். சில நிமிடங்களின் பின் ஒரு சுவரில் சாய்ந்தவனாக ஏதோ மேலே பார்த்துப் பிரார்த்திப்பவன் போல வாயில் எதையோ முனுமுனுத்தான். அன்பிற்குரிய மனைவியை இருட்டு அறை ஒன்றிற்குள் அனுப்பிவிட்டு கணவனால் பிரார்த்தனையைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்?

தொடர்ச்சி 19 ம் பக்கம்



Niyas Aasha Falin
B.Sc, SEUSL

# நவரத்தினம்

## பல்வேறு நிறங்களுக்கான காரணம்?






இரத்தினக் கற்கள் தான் கொண்டு காணப்படும் சேர்மானம் மற்றும் அதன் பருமன் மற்றும் நிறங்கள் அடிப்படையில் வேறுபடுத்தப்படுவது மாத்திரமன்றி அதன் பெறுமதியையும் தீர்மானிக்கின்றது.

நவரத்தினங்கள் - வைரம் (Diamond), வைடூரியம் (Cat's eye), முத்து (Pearl), மரகதம் (Emerald), மாணிக்கம் (Ruby), பவளம் (Coral), புட்பராகம் (Topaz), கோமேதகம் (Garnet), நீலம் (Sapphire).

**வைரம் :**

காபனின் பிரதிருப்ப வடிவத்தின் ஒரு வகையே வைரம். உலகில் காணப்படும் மிக உயர் கடினத்தன்மை கொண்ட பதார்த்தங்களில் முதன்மை பெறுகின்றது. இதற்கான காரணம் வைரம் கொண்டு காணப்படும் அணுக்களின் அமைப்பு. மேற்படி அமைப்பை இராட்சத சாலக அமைப்பு என்று கூறுவோம்.

பட்டை தீட்டுவதன் மூலமாக இவற்றின் தரம் அதிகரிக்கப்படுகின்றது. முறிவுச்சுட்டி அதிகூடிய பொருள் என்பதனால் உள்ளே நுழையும் ஒளிக்கற்றை மீண்டும் மீண்டும் கல்லின் அகத்தே முழு அகத்தெறிப்பு அடைவதன் காரணமாக கல் ஒளிர்வது போன்று தோற்றமளிக்கும்.

**வைடூரியம் :**

பழுப்பு மஞ்சள் நிறமுடைய கல். இதில் மெல்லிய வெண்ணிற கோடு காணப்படும். பார்ப்பதற்கு பூனையின் கண்ணை ஒத்த அமைப்பாக காணப்படும். பொதுவாக இந்தியா, பிரேசில் போன்ற நாடுகளில் கிடைக்கபெறும். இவற்றில் பெரிலியம் அலுமினேட் சேர்மானம் கொண்டு காணப்படும்.

**முத்து :**

சிப்பியின் உள்ளே உற்பத்தியாகும் ஒருவகை படிகம். குறிப்பாக சிப்பியின் மூலமாக சுரக்கப்படும் எனாமல் அல்லது மேற்றோல் படை சுரப்பு சிப்பியின் உடலில் தேங்கும் கழிவுகள் மற்றும் சிறு கற்கள் போன்றவற்றின் மீது படிவடைவதன் காரணமாக முத்துக்கள் தோற்றுவிக்கப்படும்.

**மரகதம்** - பச்சை நிறத்தை பெற்று காணப்படும் இது பெர்லியம், சிலிகேட், அலுமினியம் போன்ற சேர்மானங்களுக்கு மேலாக குரோமியம் காணப்படின் மாத்திரம் அவை மரகதம் என்ற நிலையை அடைகின்றது. கொலம்பியா நாட்டில் பெறப்படும் மரகதமே உலகில் மிக உயரிய மரகத வகையை சார்ந்ததாக காணப்படுகின்றது.

**மாணிக்கம்** - இரத்தினக்கல் வகையில் உயர் ஜாதி இதுவாகும். சிவப்பு, இளம் சிவப்பு நிறத்தை பெற்றது. அலுமினியம் ஒக்சைட் சேர்மானத்தை கொண்டது. இலங்கை, மொசாம்பிக், மடகஸ்கார் போன்ற நாடுகளில் கிடைக்கப்பெறும்.

**நீலம்** - அலுமினியம் ஒக்சைட் சேர்மானத்தை கொண்டு காணப்படும் இது நீலநிறத்தை பெறுவதனால் நீலமாணிக்கம் என்று அழைக்கப்படுகின்றது. இதற்கு மேலாக டைட்டேனியம் காணப்படுமாயின் இதன் தரம் உயர்வானது.

**புட்பராகம்** - மஞ்சள் நிறமுடையதாக பொதுவாக காணப்படும். நிறமற்ற, நீளம், சிவப்பு போன்ற நிறத்தை பெறுவது இவை கொண்டுள்ள தாதுக்களின் செறிவு மற்றும் சேர்க்கை காரணமாக.

**கோமேதகம்** - இவற்றின் நிறம் பெருமளவு பசுவின் மூத்திரத்தை (சிறுநீர்) ஒத்த நிறமுடையதாக காணப்பட்டதனால் பழங்கால மக்கள் கோமூத்திரம் (கோமேதகம்) என்று அழைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**பவளம்** - பவளப்பாறைகள் என்று அழைக்கப்படும் இவை கடல் சூழலில் பெறப்படுகின்றது. குறிப்பாக இவை ஒருவகை உயிரனத்தை சார்ந்தது. அதாவது முள்ளந்தண்டிலி கணத்தின் உள்ளடங்கும் இவை கடலில் காணப்படும் பல்வேறு வகை உப்பு படிகங்களை தன்னுள்ளே உள்வாங்கி பல்வேறு நிறங்களை பெறுகின்றது.

**“அவனே, இரண்டு கடல்களையும் ஒன்றோடொன்று சந்திக்கச் செய்தான். (ஆயினும்) அவற்றிடையே ஒரு தடுப்பும் இருக்கிறது அதை அவை மீறமாட்டா. அவ்விரண்டிலிருந்தும் முத்தும் பவளமும் வெளியாகின்றன”** (அல்-குர்ஆன் 55:19-22)

# 74 ஆவது சுதந்திர தினம்

## இலங்கையின் சுதந்திரத்திற்காகவும், தாய்நாட்டிற்காகவும்

## பங்களிப்புச் செய்த முஸ்லிம் சமூகத் தலைவர்கள்



**MSM. Bisri**
B.B.A, PGDE

**இலங்கையின் 74 ஆவது சுதந்திர தினம் 04.02.2022 ஆம் திகதி ஆகும்.**

*04.02.1948* இல் இலங்கை அந்நியர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றது. இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு முன்னர் போர்த்துகீசர்கள் 153 வருடங்கள், ஒல்லாந்தர்கள் 138 வருடங்களும், ஆங்கிலேயர்கள் 152 வருடங்களுமாக மொத்தம் 443 வருடங்கள் அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்து வந்துள்ளது.

அந்நியர் ஆட்சியின் போது இலங்கையின் சுதந்திரத்திற்காக போராடிய, குரல் கொடுத்த சகல இனத்தையும் சேர்ந்தவர்களையும் சுதந்திர போராட்ட வீரர்கள், தேசபக்தர்கள் என அழைக்கின்றோம்.

சுதந்திரத்திற்காகப் போராடிய சிங்களத் தலைவர்களான **டி.எஸ். சேனநாயக்க, எப்.ஆர். சேனநாயக்க, எஸ் டபிள்யூ ஆர் டி பண்டார நாயக்கா, சேர் டி.ஆர் விஜயவர்த்தன, ஜேம்ஸ் பீரிஸ், ஆர்தர்.வி.டயஸ், அனகாரிக தர்மபால** போன்ற பல தலைவர்களைக் குறிப்பிடலாம்.

இலங்கையின் சுதந்திரத்துக்காகப் போராடிய தமிழ் தலைவர்களாக **சேர்: முத்துக்குமாரசுவாமி, சேர்: பொன்னம்பலம் இராமநாதன், சேர்: பொன்னம்பலம் அருணாசலம்,சேர்: வைத்திலிங்கம் துரைசுவாமி, கலாயோகி: ஆனந்த குமாரசுவாமி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சி.வை. தாமோதரம் பிள்ளை** போன்ற பல தலைவர்களைக் குறிப்பிடலாம்.

இலங்கையின் சுதந்திரத்துக்காகப் போராடிய, குரல் கொடுத்த சட்ட மூலத்திற்கு ஆதரவளித்த முஸ்லிம் சமூகத் தலைவர்களாக,

**வாப்பிச்சி மரைக்கார், அறிஞர் சட்டத்தரணி: சித்திலெப்பை, சட்ட வல்லுநர்: ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ், பரிஸ்டர்: சேர்: முகம்மது மாக்கான் மாக்கார், என்.எச்.எம். அப்துல்காதர், கலாநிதி: டி.பி.ஜாயா, கலாநிதி: பதியுதீன் மஹ்மூத், சேர்:ராசிக் பரீட், ஜனாப் எம்.சி.எம்.கலீல்** போன்ற பல தலைவர்களைக் குறிப்பிடலாம்.


### ஏ.எம்.வாப்பிச்சி மரைக்கார்




இவர் ஒரு கட்டிடக் கலை ஞரும், ஒரு சமூக சேவையாளரும் ஆவார். ஆங்கிலேயர் ஆட்சியின் போது நாட்டின் நலனுக்காக உழைத்தார். அரசின் நிதி உதவியுடன் கட்டப்பட்ட கலை நயமிக்க 10 கட்டடங்கள் இன்றும் கொழும்பு நகரில் காட்சி தருகின்றன.

கோல்பேஸ் ஹோட்டல், கொழும்பு தபால் கந்தோர், கொழும்பு துறைமுக கட்டிடம், வர்த்தகப் பல் தொகுதி கட்டிடம், கொழும்பு மருதானை புகையிரத நிலையம், கொழும்பு மாநகர கட்டிடம், கொழும்பு நூதனசாலை போன்றவைகளைக் குறிப்பிடலாம். கலைநயத்துடன் கட்டி முடித்த வெள்ளை நிறத்துடன் காட்சி தரும் கொழும்பு நூதனசாலையை பார்வையிட்ட ஆங்கிலேய ஆள்பதி இதற்கு கைமாறாக நீங்கள் எதை எதிர்பார்க்கின்றீர்கள் எனக் கேட்டபோது "ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அரை நேரத்துடன் நூதனசாலையை மூடிவிட வேண்டும். இந்நேரம் முஸ்லிம்களுக்குரிய ஜும்மா தொழுகைக்குரிய நேரம் ஆகும்" எனக் கேட்டுக்கொண்டார். பெரும் கொடைவள்ளலான இவருக்கு கொழும்பு சினமன் கார்டன் என்னும் இடத்தில் 500 ஏக்கர் கருவாத்தோட்ட நிலம் காணப்பட்டதுடன், இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பாரிய பங்களிப்புச் செய்தார்.

### சட்ட வல்லுநர், அறிஞர் சித்திலெப்பை



1838 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11 ஆம் திகதி கண்டியில் பிறந்தார். இவர் இலங்கையின் முதலாவது முஸ்லிம் சட்டத்தரணியும் ஆவார். இலங்கையின் சுதந்தி ரத்திற்காக பெரும்பான்மை இனத்தவர்களுடன் சேர்ந்து பாடுபட்டவர். இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச் சிக்காக "கல்விச் சங்கம்" ஒன்றை நிறுவி நாட்டின் பல பாகங்களிலும் மதரஸா என்ற பெயரில் அரபு தமிழ் பாடசாலை களை நிறுவினார்.

இவற்றுள் கொழும்பு மருதானை சாஹிரா கல்லூரி, கண்டி கட்டுக்களை மதரஸா, கம்பளை, பொல் கஹவெல, குருநாகல், திருகோணமலை டொகயாட் வீதி, மூதூர் நொக்ஸ் வீதியிலும் மத்ரஸாக்களை அமைத்தார்.

1870, 1872, 1879, 1890, 1892 ஆம் ஆண்டுகளில் இதனை ஆரம்பித்து வைத்தார். மூதூர் நொக்ஸ் வீதியில் 1879ஆம் ஆண்டில் அரபுத் தமிழ் பாடசாலை (மத்ரசா) இயங்கி வந்ததாக ஆங்கிலேயர் நாட்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் அரபுத் தமிழ் பாடசாலைகளே அரசாங்கப் பாடசாலைகளாக தோற்றம் பெற்றன. இவர் இலங்கையின் முதலாவது தமிழ் நாவல் "அசன்பே சரித்திரம்" எனும் நாவலை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

### சட்டவல்லுநர் ஐ.எல்.எம்.அப்துல் அஸீஸ் (பிறப்பு கொழும்பு)



ஐதுரூஸ் லெப்பை மரைக்கார் அப்துல் அஸீஸ் 1879 ஆம் ஆண்டு கொழும்பில் பிறந்தார். இவர் அன்றைய சோனக சமூகத்தில் பிரபல்யம் பெற்ற சட்ட வல்லு நராக திகழ்ந்தார். அப்போது சட்ட வல்லுநரை "அப்புக்காத்து" என்று அழைத்தனர்.

அப்போதைய ஆங்கிலேய தேசாதிபதி இவரை இலங்கைச் சோனகர்களின் தலைவராக நியமித்தார். இவர் அறிஞர் சித்திலெப்பை உடன் இணைந்து முஸ்லிம் கல்விச் சங்கத்தில் இணைந்து பணியாற்றியதுடன் மருதானை பள்ளிவாயல் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

இவரின் பேத்தியை மூதூரில் பிறந்து, கொழும்பில் வசித்து வரும் யூசுப் (Post Master) அவர்கள் திருமணம் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

1924 ஆம் ஆண்டு இலங்கை முழுவதும் ஒரு தேர்தல் தொகுதியாகக் கருதி "முகம்மதியன் தேர்தல் தொகுதி" உருவாக்கப்பட்டு சட்டசபைக்கு சட்ட வல்லுனர் சேர் முகம்மது மாக்கான் மாக்கார், என்.எச். எம். அப்துல்காதர், கலாநிதி டி.பி. ஜாயா ஆகிய 3 பேர் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களும் இலங்கையின் பொருளாதாரத்திற்கும், இலங்கையின் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் பெரும்பான்மை இனப்பிரதிநிதிகளுடன் சேர்ந்து குரல் கொடுத்தனர்.

## பரிஸ்டர் சேர் மாக்கான் மாக்கார்



இவர் 07.09.1885ல் இல் காலியில் பிறந்தார். (தந்தையின் பெயர் உதுமா லெப்பை மரைக்கார்) இவர் கொழும்பு வெஸ்லி கல்லூரியில் கல்வி கற்றார்.

1924 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று சட்டசபை உறுப்பினரானார். 1938-ல் இங்கிலாந்து அரசினால் சேர் பட்டம் வழங்கி கௌரவிக் கப்பட்டார்.

இலங்கையில் சேர் பட்டம் பெற்ற முதல் முஸ்லிம் ஆவார். இலங்கை சுதந்திரம் பெறுவதற்குரிய மசோதாவுக்கு ஆதரவு வழங்கினார். இவரின் தந்தை உதுமா லெப்பை மரைக்கார் இலங்கையில் மிகப் பிரபல்யம் பெற்ற ஏகபோக உரிமை கொண்ட மாணிக் கக்கல் வியாபாரியாவார்.

இங்கிலாந்து 2ம் ஜோர்ஜ் மன்னன் இலங்கை வந்த போது இவரிடம் விலை உயர்ந்த மாணிக்கக் கல் ஒன்றை வாங்கி சென்றதாக வரலாற்றில் குறிப்பிடப்பட் டுள்ளது. இவர்களின் வர்த்தக நாமம் பொறிக் கப்பட்ட கட்டிடத்தொகுதி இன்றும் காலி முகத்திடலில் கம்பீரமாக காட்சி தருகிறது.

## கலாநிதி டி.பி.ஜாயா (பிறப்பு கண்டி கலகெதர 1890)

இவர் ஒரு சிறந்த கல்விமானாக கருதப் பட்டார். முதலாவது சுதந்திர இலங்கையின் அமைச்சரவையில் அங்கம் வகித்தவர். இலங்கையின் சுதந்திர போராட்ட வீரர் என இலங்கை மக்களால் நினைவு கூறப்படு கிறார். இவர் புனித ஹஜ் பயணத்தின்போது மக்காவில் மரணமானார். இவரது ஜனாசா ஜன்னதுல் பகீ (ஸஹாபாக்கள் அடக்கம் செய் யப்பட்ட இடம்) அடக்கம் செய்யப்பட்டது.

## சேர் ராசிக் பரீட் (பிறப்பு கொழும்பு 1793)



ஆங்கிலேயர் கால கட்டிடக் கலைஞரான வாப்பிச்சி மரைக்கரின் மகன் டபில்யூ. எம். அப்துல் ரஹ்மான் (சட்ட சபை உறுப்பினர்) என்பவரின் மகனாகப் பிறந்தார். இலங் கையில் சேர் பட்டம் பெற்ற இரண்டாவது முஸ்லிம் இவராவார்.

இவரின் சமூக சேவைக்காக பிரித்தானிய அரசாங்கம் சேர் பட்டம் வழங்கி கௌர வித்தமை குறிப்பிடத்தக்கது. 1960ல் பிரதமர் தஹநாயக்க அரசாங்கத்தில் அமைச்சராக இருந்தார். இவர் பெரும் செல்வந்த குடம் பத்தில் பிறந்தமையினால் சமூக சேவையிலும், முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தனது சொத்துக்களை வாரி வழங்கினார்.

இலங்கையின் முஸ்லிம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளை நிறுவினார். இலங்கை சுதந்திரம் பெறுவதற்கு பெரும் சேவையாற்றிய இவர் இலங்கை செனட் சபைக்கு 1948 ஆம் ஆண்டு நியமிக் கப்பட்டார்.

இலங்கைச் சோனகர்களின் முடிசூடா மன்னன் என போற்றப்படுகிறார்.

### பிரித்தானிய ஆட்சிக்கு திராகப் போராடிய முஸ்லிம்கள்

பிரித்தானிய ஆட்சிக்கு எதிராகப் போராடி 1804 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் திகதி கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 07 முஸ்லிம்கள் உயிர்த் தியாகம் செய்தனர்.

இவர்களில் திருகோணமலை மாவட் டத்தைச் சேர்ந்த சேகு தீ தீ ( தோப்பூர்), சலாம்பதி உடையார்(குச்சவெளி), பீர் முகம்மது (மார்க்கக் கடமை செய்பவர்) இந்த 03 முஸ்லிம்களும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மீரா ஒசன் அபூபக்கர் (ராய் முனை), ஒசன் லெப்பை உதுமா லெப்பை (ராய் முனை), அபூபக்கர் ஈசா முகாந்திரம் (சம்மாந் துறை), அனீஸ் லெப்பை (மருதமுனை) ஆகிய நான்கு முஸ்லிம்களும் ஆவர்.

1804 ல் உயிர் தியாகம் செய்த முஸ்லிம் களையும், நாட்டுக்காகப் போராடிய வீரர்களாக வர்த்தமானி மூலம் அறிவிப்பு செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் அன்றைய நீதி அமைச்சரிடம் வேண்டு கோள் விடுத்ததும் குறிப்பிடத்தக்கது. (2014 பிப்ரவரி 3ஆம் திகதி விடிவெள்ளி பத்திரிகை).

எனவே இந்நாட்டிற்கு பங்களிப்புச் செய்த முஸ்லிம்கள் சுதந்திரம் பெறுவ தற்குப் போராடிய முஸ்லிம் தலைவர் களின் பெயர்கள் வருடாந்தம் பெப்ரவரி 4ஆம் திகதி நம் அனைவராலும் நினைவு கூறப்படவேண்டும்.

# மூதூரில் 74 ஆவது சுதந்திர தின நிகழ்வு























A.C.M. Asmy

# மூதூர் படகு விபத்து
## 29 ஆண்டுகள் நிறைவு

**1993.01.25 - 2022.01.25**



மூதூர் என்றால் அன்றைய காலங்களில் முடிவிடம் என்றும் கூட கூறலாம். காரணம் பாதைகளில் முடிவிடம் இங்கேதான் நிறைவு பெறும்.

நெய்தல், குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம் போன்ற ஐ நிலங்களையும் தன்னகத்தே தனதாக்கிய ஒரு பற்று. இதனாலோ இலங்கை வரலாற்றில் கொட்டியாபுரப்பற்று ஒர் தனித்துவ அடையாளத்தை பெற்றுள்ளது.

ஒரு தசாப்தங்கள் முன்னர் மூதூர் என்றால் கடல் பயணம்தான் நினைவுக்கு வரும். காரணம் மூதூருக்கான பயணத்தின் அடிப்படையாக இருந்தது கடல் பயணம் மட்டுமே.

அதுவொரு சுவாரசியமான பயணமாக இருந்தபோதும் பயமான பயணம் தான். அவ்வகையில் மூதூரின் கடல் பயணம் ஒரு வரலாற்று சுவட்டை இப்மண்ணில் உள்ள அனைவருக்கும் விதைத்துவிட்டது. அதுவே மூதூர் லோஞ்சி கடலில் மூழ்கிய தினம் இன்று.....

திருகோணமலை மாவட்டம் மூதூர் வரலாற்றில் என்றுமே நெஞ்சங்களை விட்டு அகலாத சோகமும், கண்ணீரும், அவலக் குரல்களும் எதிரொலித்த நாள்தான் 1993 ஜனவரி 25ஆம் திகதியாகும்.

25ஆம் திகதி அன்று பிற்பகல் 2.30 மணியளவில் திருகோணமலை ஜெட்டியிலிருந்து மூதூரை நோக்கி ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட 130 பயணிகளுடன் பயணித்த தனியார் இயந்திரப் படகு திருகோணமலைக்கு அண்மையில் உள்ள பாதாள மலையை நெருங்கியதும் சீறி எழுந்த பாரிய கடல் அலைகளால் மூர்க்கத்தனமாக மோதப்பட்டு கடலுடன் சங்கமமானது. படகில் பயணம் செய்தவர்களில் 30 பேர் மட்டுமே காப்பாற்றப்பட்டதுடன் 13 பேரின் சடலங்கள் மட்டுமே மக்களால் மீட்கப் பட்டது.

இக்கோரச் சம்பவம் நிகழ்ந்து 26 ஆண்டுகள் கடந்து விட்டது. ஆனாலும் அந்தக் கொடூரச் சம்பவத்தை மூதூர் மக்களின் மனத்திரையில் இருந்து மறைக்க முடியாதுதான். அப்போதைய காலங்களில் திருமலையிலிருந்து மூதூருக்கு கடல் வழிப் பயணம் மேற்கொள்வதானால் கடல் வழியாகப் 12 கிலோ மீற்றர் தூரம்தான்.

ஆனால் அந்த தூரத்தை ஒன்றரை மணி நேரமாக இயந்திரப் படகுகளில் பயணிக்க வேண்டும். ஒரு படகில் சுமார் 150 பிரயாணிகள் மாத்திரமே பிரயாணம் செய்ய முடியும். காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரையும்தான் இரண்டு படகுகளும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தன.

நாளாந்தம் இப்படியாகத்தான் மூதூர் பயணச் சேவை இருந்து வந்தது. மாலை 5.00 மணிப் படகைத் தவறவிடும் அரசாங்க ஊழியர்களும் ஏனைய பொது மக்களும் திருமலையில அன்றைய இரவைக் கழிக்க வேண்டிய நிலையும் நாளாந்தம் ஏற்பட்டு வந்தது.

மூதூர் மக்களின் சகல தேவைகளும் திருமலையில் அமைந்துள்ளதால் நாளாந்தம் மூதூர் மக்கள் திருமலைக்குப் பிரயாணம் செய்ய வேண்டிய கட்டாயத் தேவையுள்ளது. அப்போதைய காலங்களில் மூதூர் தமிழ் மக்கள் மட்டு மல்லாது முஸ்லிம் மக்களும் இராணுவக் கெடு பிடிக்குள் சிக்கித் தவித்த வரலாறும் உள்ளது.

எது எவ்வாறோ மரணித்தவர்கள் நினைவு கூறப்பட வேண்டியவர்கள் என்பதற்கு அப்பால் அவர்களின் ஆவணப்பாதுகாப்பு தேவையான ஒன்றாக உணரப்பட்டுள்ளது. இவற்றை தாண்டி ஒரு நினைவு தினங்கள் வெறும் முகநூலில் மட்டுமே நினைவூட்டப்படுவது கசப்பான மனோபாவமாகும்.

மேற்படி கப்பல் விபத்தை அடிப்படை யாகக்கொண்ட மூதூர் எழுத்தாளர்கள் மூலம் பல்வேறு சிறுகதை எழுதப்பட்டு பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக ஜலச மாதி என்ற நூலின் ஆசிரியர்உபைத்துல்லா மூதூர் அவர்களின் கதை அலாதியானது.

குறிப்பு - மேற்படி நினைவு தினத்தில் குறிப்பாக மூதூர் மண் இழந்த ஒரு முக்கிய ஆளுமை மாமனிதன் ரெஸீம் sir நினைவூட்டப்படுவார்.

### உயிர் தப்பியவர்களின் பெயர் விபரம் (48 பேர்)

01. மூதூர் பொலிசு நிலையத்தைச் சேர்ந்த ரீசேல் பொலிஸ் கான்ஸ்டபிள் இலக்கம் 28823 முனசிங்க (28 வயது)
02. ஹட்டன் பொலிசு நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் இலக்கம் 28388 அப்துல் ஜப்பார் நவாஸ் (23 வயது).
03. மூதூர் இலங்கை தரைப்படையைச் சேர்ந்த லெப்டினன்ற் குணசிறி (28வயது)
04. மூதூர் இலங்கை தரைப்படையைச் சேர்ந்த சாதாரண படைவீரர் குணசிங்க (22 வயது).
05. மூதூர் இலங்கை தரைப்படையைச் சேர்ந்த சார்ஜன் விஜேகோன்.
06. மூதூர்இலங்கை தரைப்படையைச் சேர்ந்த சாதாரண படைவீரர் சுசந்த ஹேரத்.
07. மூதூர் இலங்கை தரைப்படையைச்சேர்ந்த லான்ஸ்கோப்ரல் முனசிங்க
08. மூதூர், இலங்கை தரைப்படையைச் சேர்ந்த சாதாரண படைவீரர் திலகரத்ன.
09. மூதூர், இலங்கை தரைப்படையைச் சேர்ந்த லான்ஸ்கோப்ரல் வினித்தபண்டார.
10. மூதூர், இலங்கை தரைப்படையைச் சேர்ந்த சாதாரண படைவீரர் ரத்நாயக்க.
11. மூதூர், இலங்கை தரைப்படையைச் சேர்ந்த சாதாரண படைவீரர் எஸ். பியதிலக
12. மூதூர், இலங்கை தரைப்படையைச் சேர்ந்த சாதாரண படைவீரர் நதிகுமார.
13. மூதூர், இலங்கை தரைப்படையைச் சேர்ந்த சாதாரண படைவீரா வீரசிங்க பண்டார.
14. மூதூர், இலங்கை தரைப்படையைச் சேர்ந்த சாதாரண படைவீரர் குருமுனி பிரியந்த.
15. திருகோணமலை பொலிசு நிலையத்தைச் சேர்ந்த ரீசேல் பொலிஸ் கான்ஸ்டபிள் 21740 அமீர் (24 வயது)
16. ஜனாப் எஸ். எம். ஜாபிர் (19 வயது), மூதூர்.
17. திரு. எஸ். சிவஞானம் (24 வயது), தோப்பூர்
18. ஜனாப் எம். எம்.அப்துல் வதூத் (44 வயது), மூதூர்.
19. ஜனாப் ஏ. ஜே. அன்சார்(30 வயது) மூதூர்.
20. ஜனாப் எம். சி. பளீர் (24 வயது) மூதூர்.
21. ஜனாப் ஹுசெயின் நிசார் (33 வயது), மூதூர்.
22. ஜனாப் எஸ். ஏ. ரசாக் (28 வயது), மூதூர்.
23. ஜனாப் எஸ். மன்சூர் (31 வயது), மூதூர்.
24. திரு. ஏ. குணகலதாஸ் (27 வயது), அகதி முகாம், தோப்பூர்.
25. கே. யோகேஸ்வரி (28 வயது), மூதூர்.
26. திரு. குருகுலசிங்கம் (12 வயது), மூதூர்.
27. ஜனாப். எம். எஸ்.ஜுனைட் (32 வயது), மூதூர்.
28. ஜனாப். எஸ். ஏ.எம். சாலிகு(28 வயது), தோப்பூர்
29. ஜனாப். ரி. எஸ் அப்துல் ஹமீட் (40 வயது), மூதூர்
30. ஜனாப் எம். எஸ். நஸார் (21 வயது), மூதூர்.
31. ஜனாப். எஸ் எம். மாகிர் (28 வயது), தோப்பூர்
32. ஜனாப் கே. எம்.எம். பளீர் (35 வயது), மூதூர்.
33. சேகுத்தம்பி சகாப்தீன் (28 வயது), மூதூர்.
34. ஜனாப் எம். எஸ். கலீல் (28 வயது), மூதூர்.
35. சேகு முகம்மது ராசிக் (36 வயது), மூதூர்.
36. ஜனாப் ஏ. சி. மொகமட் யூசுப் (40 வயது), மூதூர்.
37. சந்திரசேகர் சாந்தினி (18 வயது), திருகோணமலை
38. சாகுல் ஹமீட் மொகமட் ஜிகாட் (21 வயது), மூதூர்.
39. பக்கீர் குட்டி ஹுசெயின் (33 வயது), மூதூர்
40. ஜனாப் எஸ். ஆர். ரசாக் (28 வயது), மூதூர்.
41. திரு. எஸ். சுரேஸ் கண்ணன் (12 வயது), திருகோணமலை.
42. ஜனாப். கே. மொகமட் காலிதீன் (32 வயது), தோப்பூர்.
43. டபிள்யு. ஆரியதாச (35 வயது), தோப்பூர்.
44. அப்துல் ஜப்பார் அனஸ் (29. வயது), மூதூர்.
45. அப்துல் தயான் மொகமட் ரியாட் (21 வயது), தோப்பூர்.
46. மொகமட் சலீம் நஸார் (21 வயது), தோப்பூர்.
47. நடராஜா சிவலிங்கம் (25 வயது) படகின் மேற்தள உதவியாளர்.
48. சுப்பிரமணியம் தியாகராஜா (32 வயது) படகின் சுக்கானி.

### சடலங்கள் மீட்கப்பட்டவர்களின் பெயர் விபரம் (13 பேர்)

01. ஹுசைன் உம்மா குலுது, மூதூர்
02. சதக்கு மொகமட் அமானுல்லா, தோப்பூர்
03. நூர் மொகமட் அப்துல் ஹுதா, தோப்பூர்.
04. பாலன் காளியம்மா அல்லது பாக்கியம், மூதூர்.
05. சாகுல் ஹமீட், மூதூர்.
06. கணபதிப்பிள்ளை சகுந்தலாதேவி, மூதூர்.
07. மாரிமுத்து கணபதிப்பிள்ளை, மூதூர்.
08. பாதேசலிங்கம் மகேஸ்வரி, மூதூர்.
09. பாக்கியராஜ் மாலினி, மூதூர்.
10. அப்துல் ஹாதா முகம்மது ஹசன் (ஏழுமாதக் குழந்தை,)தோப்பூர்
11. பாக்கியராஜ் அமராவதி, மூதூர்.
12. ஆயிஷா (4 மாதக்குழந்தை)- ஹுசெயின் நிஸாரின் மகள், மூதூர்.
13. இலேசபிள்ளை ராசமணி, மூதூர்.

### நீரில் மூழ்கி மரணமடைந்த நபர்களின் பெயர் விபரம் (46 பேர்)

01. கோப்ரல் சந்திரசேகர, இலங்கைத் தரைப்படை, மூதூர்.
02. சாதாரண படைவீரர் ஜீவானந்த, இலங்கைத் தரைப்படை, மூதூர்.
03. சாதாரண படைவீரர் சேனாரத்ன, இலங்கைத் தரைப்படை, மூதூர்
04. விபத்துக்குள்ளான இயந்திரப் படகின் சாரதியான வேலும் மயிலும் நாகேந்திரராஜா அல்லது சின்னராசா.
05. பி. பத்மநாதன், மூதூர்.
06. பி. கைலாயபிள்ளை, பூநகர்.
07. எஸ். யோகேஸ்வரி, கட்டை பறிச்சான்.
08. எஸ்.எம். ராபீக், மூதூர்.
09. ஆர். ராதியா, மூதூர்.
10. ஆர். பரீதாஉம்மா, மூதூர்.
11. செரீப் நஸிரா, மூதூர்.
12. ஏ. ஹமீட் வாகிது, மூதூர்.
13. எம்.எம்.ரசாக், மூதூர்.
14. மொகமட் ஜிசாட், மூதூர்.
15. எம்.பீ.ஆர். ராஜாப்தீன் மூதூர்.
16. எம். பைசார், மூதூர்.
17. எம்.பி.நபீர், மூதூர்.
18. பாத்தும்மாபீபீ, மூதூர்.
19. உம்முஜுல்தூன், மூதூர்.
20. எஸ்.மயில்வாகனம், மூதூர்.
21. பசீமா பளீர், மூதூர்.
22. டபிள்யூ. அப்துல் ஹமீட், மூதூர்.
23. நஸீரா மொகமட் சரீப், மூதூர்.
24. எஸ். தயாவதி, தோப்பூர்.
25. கே. கற்பகம், தோப்பூர்.
26. ஏ.ரி.கலீல் ரகுமான், தோப்பூர்.
27. ரசமொகமட் கயாத்தும்மா, தோப்பூர்.
28. எம். எம். புவாட், மூதூர்.
29. எம். தியாகராஜா,மூதூர்.
30. எம். வசந்த குமாரி, சம்பூர்.
31. ஜீனோராஜ், சம்பூர்.
32. எம். அன்வர் சதாத், மூதூர்.
33. ஏ.பி. எஸ். ஹிலால்தீன், மூதூர்
34. ஏ. தமயந்தி, மூதூர்.
35. குருகுலசிங்கம் (4 வயது), மூதூர்.
36. கோமளாதேவி,தோப்பூர்.
37. குலாம் மொகமட் ஜின்னா தோப்பூர்
38. எஸ். சந்திரஜோதி, கட்டைபறிச்சான்.
39. அப்துல் ரஹீம் முஸ்தக்கீன், மூதூர்.
40. எம். எச். பாருக், மூதூர்.
41. எச். ஆர். பைசால், மூதூர்
42. எம். லாபீர், மூதூர்
43. எம். எம். எம். றெஸீன், மூதூர்.
44. ஹமீது ராஜ் பைசால், மூதூர்.
45. டபிள்யு. ரிகாமினி, மூதூர்.
46. கே. எம். சாகிர், மூதூர்.

### சான்றளித்த சான்றாளர்களின் பெயர்ப் பட்டியல். (92 பேர்)

**கொழும்பில்**

01. திருமதி எஸ். பீ. டபிள்யு. பீ. எம். எம். ஜயந்தி பொடிமெனிக்கே. ஹிரதகொல்ல, குருநாகல்.
02. திரு. ஆர். எஸ். ஹேமச்சந்திர, பலான்வத்தை, பன்னிப்பிட்டிய.
03. திரு. எஸ். ஆறுமுகநாதன், உரிமையாளர், வடிவேலு அண்ட் பிறதர்ஸ், உள்துறைமுக வீதி, திருகோணமலை.
04. திரு. ஜீ. எஸ். குமார் அல்விஸ், திருகோணமலை-மூதூர் படகுச் சேவையின் பங்காளர், உள்துறைமுகவீதி, திருகோணமலை.

23. திரு. எச். கலில் ந. சில்வா, அரச எந்திரியர், கப்பல் அமைவையாளரும், துறைமுகங்கள், கப்பற்துறை அமைச்சு, கொழும்பு.
24. லெப்டினன்ற் எம். எம். பீ. குணசிறி, இலங்கை கபேட்சை தரைப்படை முகாம், மூதூர்.
25. திரு. கே. எஸ்.ஜெயச்சந்திரா, உதவி அரசாங்க அதிபர், குச்சவெளி.
26. கப்டன் ஆர். என். ஜயரத்ன, பிரதித் துறைமுகத் தலைவர் திருகோணமலை.

**திருகோணமலையில்**

27. திரு. சுப்பிரமணியம் தியாகராஜா அல்லது சேகர் (மூழ்கிய படகின் சுக்கானி).
28. திரு. எம்.எப்.எம்.சாலிக், என்.சி. வீதி, திருகோணமலை.
29. திரு. கே. சிவபாலன், பொது முகாமையாளர், கிழக்குப் பிராந்தியப் போக்குவரத்துச் சபை, கல்முனை.
30. திருமதி. ஏ. தனபாலசிங்கம் ஜெயாஸ் சிப்சைட் சேவைகள் கம்பனியின் உரிமையாளர்., திருகோணமலை.
31. திரு.தனபாலசிங்கம் ராஜ்குமார், தபால்நிலைய வீதி, திருகோணமலை.
32. திரு. ரி. பாலதேவன், பிரதிப்பணிப்பாளர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், வடக்கு கிழக்கு மாகாண சபை, திருகோணமலை.
33. திரு. ஆர். மகாதேவன், பிரதிச்செயலாளர், வடக்கு கிழக்கு மாகாண சபை, திருகோணமலை.
34. திருமதி என். கமலாவதி, சுடலை வீதி, திருகோணமலை.
35. திருமதி கந்தையா பொன்னம்மா, ஓர்ஸ் ஹில், திருகோணமலை.
36. திரு. கே. கிருஷ்ணதாசன், பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், கண் காணிப்பாளர் அலுவலகம், திருகோணமலை.

**மூதூரில்**

37. திரு. எஸ்எம்.ஜாபீர், ஜாயாவீதி, மூதூர் 4.
38. திருமதி எஸ். அரியமலர்தேவி, 5 ஆம் குறிச்சி, கட்டைபறிச்சான்.
39. திரு.எஸ்.சிவஞானம், பெரியவெலி, தோப்பூர்.
40. திருமதி ரி. கொலிசம்பீபீ, அரபுக் கல்லூரி வீதி, மூதூர்.
41. திருமதி. எம்.எஸ்.சுபைதா உம்மா, பெரியபாலம்,மூதூர்.
42. திருமதி. எம். ஜெசீமா, தாஹா நகர், மூதூர் 7.
43. திரு.எம்.எம்.அப்துல் வதூத், ஆலிம் வீதி, மூதூர் 6.
44. அப்துல் ஜப்பார் அன்சார், அக்கரைச்சேனை, மூதூர்.
45. வணக்கத்துக்குரிய தெஹிவத்தை பிரேமரத்ன தேரர், மண்டலகிரி ஜயமகா விஹாரை, தெஹிவத்தை.
46. திரு.பி.கே. ஹுசையின் நிஸார், நிஸார் சைக்கிள் வேக்ஸ், சந்தை வீதி, மூதூர்.
47. திருமதி. எம். சந்திரா, அப்துல் காசிம் வீதி, மூதூர். 01
48. திரு. எம். சீ.பளீர், நெய்தல் நகர், மூதூர் 1.
49. திரு. பக்கீர்குட்டி அமீர், ரி.பொ.கா. 21470, விசேட குற்றவியல் பிரிவு, பொலிசு தலைமையலுவலகம் கொழும்பு.
50. திரு.என். பி.ஜுனைட், அரபுக் கல்லூரி வீதி, மூதூர் 5.
51. திரு.ஏ.ஜே.ஜவாகிர், தலைவர், மூதூர் முஸ்லிம் அகதிகள் நலன்புரிச் சங்கம், மத்திய வீதி, மூதூர் 3.
52. திரு. எம்.எம்.அப்துல் ஹமீட், சாபி நகர், மூதூர் 5.
53. திருமதி.பி. இராஜேஸ்வரி, பள்ளிக் குடியிருப்பு, தோப்பூர்.
54. திருமதி.கே. தெய்வானைப்பிள்ளை, பள்ளிக்குடியிருப்பு, தோப்பூர்.
55. திரு. ஏ. ஆர். சார்ஜகான், தோப்பூர் 5.
56. திரு. என். எம். முஸ்தக்கீன், பெற்றோலியக் கூட்டுத்தாபன விடுதி, திருகோணமலை.
57. திரு.ஏ.ஏ. அக்பர், அரபுக் கல்லூரி வீதி, மூதூர் 5.
58. திரு.எஸ். ஏ. ரசாக், சாபி நகர், மூதூர் 5.
59. டாக்டர் பீ. இருதயநாதன், மூதூர் மாவட்ட மருந்துவசாலையின் பொறுப்பதிகாரி, மூதூர்.
60. திரு. எஸ். எம். மக்பூல்தம்பி, இ.போ.ச. நடத்துநர், வாட் இல.2, தோப்பூர்
61. திரு. கே. எல். சுபைர், தலைவர், இஸ்லாமியக் கலாசார நிலையம், மூதூர்.
62. திரு.ஜே.எம்.லாகீர், சமூகச் செயலாளர், இஸ்லாமிய கலாசார நிலையம், மூதூர்.
63. திருமதி. எம் புவனேஸ்வரி, அப்துல் காசிம் வீதி, அக்கரைச்சேனை, மூதூர் 1.
64. ஜனாப். என் மன்சூர், ஆனைச்சேனை, மூதூர் 2.
65. திரு.எம். வைபிரவநாதன், 7 ஆம் குறிச்சி, சம்பூர்.
66. ஜனாப் எம்.ஐ.எம். இப்ராகிம், நூரானியா வீதி, சாபி நகர், மூதூர்5.
67. ஜனாப். ஏ.ஆர்.ஏ. ஜப்பார், பஸிரா மன்ஸில் நொக்ஸ் வீதி, மூதூர்
68. திரு. ஏ. குணகுலதாஸ், 59. ஆம் மைல் கட்டை, தோப்பூர்.
69. ஜனாப் கே. மொகமட் நிசார், பிரதான வீதி மூதூர் 1.
70. ஜனாப் ஏ. ஜப்பார் அன்சார், அக்கரைச்சேனை மூதூர் 1.
71. திரு. கே. லக்ஸ்மணன், பொது முகாமையாளர், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தேவாலய வீதி, மூதூர் 3.
72. திருமதி. கே. யோகேஸ்வரி, இல. 09., கூனித்தீவு மூதூர் 5.
73. திருமதி. எம். சீதாம்பாள், அகதிகள் முகாம், ஜின்னா நகர், தோப்பூர்.
74. ஜனாப். எம். எஸ். ஜுனைட், சாபி நகர், மூதூர் 5.
75. ஜனாப் எஸ்.எம்.ஏ. சாலிகு, 5ஆம் குறிச்சி, அல்லை நகர், தோப்பூர்.
76. திரு. எஸ். சதக்குத்தம்பி, அல்லை நகர், தோப்பூர் 6.
77. ஜனாப். ரி. எஸ். அப்துல் ஹமீட், நெய்தல் நகர், மூதூர் 1.
78. திரு. எம். சரவணமுத்து, கட்டைபறிச்சான் 7.
79. ஜனாப். எம். ஹனீபா உவைஸ், ஹமீட் ஜுவலர்ஸ் மூதூர் 1.
80. திரு. எம். எச். அலி அக்பர், சாபி நகர், மூதூர் 2.
81. திரு. எம். எஸ் நஸார், நெய்தல் நகர், மூதூர் 1.
82. திரு. கே. நடேசலிங்கம், கோவில் வீதி, மூதூர்.
83. திரு. எஸ்.ஏ. ரசாக், சாபி நகர், மூதூர் 5.
84. திரு. எம். எப். எம். முஸம்மில், நொக்ஸ் வீதி, மூதூர்.
85. திருமதி. கே. ஸ்ரீகாந்தன், கிராம உத்தியோகத்தர், ஈச்சிலம்பற்றை.
86. திரு. எஸ் எம். மாகிர், மலேரியா ஒழிப்பு இயக்கம், வாட் இல. 2, தோப்பூர்.
87. திரு. கே. எம். எம் பளீர், தக்வா நகர், மூதூர்.
88. திரு. டபிள்யு. எம். எஸ். மொஹமட், அக்கரைச்சேனை, மூதூர்.1
89. திருமதி. கே. நாகம்மா, ஆலிம் சேனை, மூதூர் 2.
90. திரு. வீ. பாலன், தேவாலய வீதி, மூதூர் 2.
91. திரு. எம். எம். எம். றெஸீன், பிரதான வீதி, மூதூர் 1.
92. திரு. எம்டி. முனசிங்க. பொ. கா. இல. 28823, பொலிஸ் நிலையம், மூதூர்.

## ஒளிமயமான எதிர்காலம்

வாழ்க்கை எனும்
மாய உலகில்...!!!
வாழவிரும்பும் மனிதனே
அதிலிருந்து விழிந்திடு...!!!
நீ ஏதோ ஒன்றை இழந்து பார்..!!
உனக்கு மற்றொன்று நிச்சயம்
கிடைக்கும்...!!!
நீ கோபத்தை இழந்து பார்..!!!
உனக்கு சாபமில்லா வாழ்வு
கிடைக்கும்..!!!

உன்னில் தீயதை
இழந்து பார்...!!!
அதுவே உனக்கு
நல்லதுவாய் பிறக்கும்...!!!
இழப்பனவற்றை
இழந்து கிடைப்பனவற்றை
கொண்டு...!!!
மனிதனே!
அதனை ஒளிமயமான
எதிர்காலமாக்கு...!!!



ஐ.எப். ஆஷிக்கா
களுத்துறை

## மனிதமும் மனிதாபிமானமும்

மாறும் உலகில் மாற்றத்தை காண
மனிதர்களாய் இம் மண்ணில்
நாட்கள் செல்ல செல்ல குறைகிறது
எம்மிடத்தில் மனிதநேயம்.....

விளையும் புவியில் பயிர்களை
எதிர்பார்த்த நாம்விளைவிக்கும்
விவசாயிகளின் துன்பத்தை
பார்க்கவில்லை
கண்களில் கண்ணீர்களை கண்ட
பின்பும் ஏற்ற மறுகின்றோம் '
முதியோர்களை...

வீதியோரங்களில் கழிவுகளை
அகற்றுகிறோம் உயிர் பிடித்து
உணவிற்காய் ஒங்குபவர்களை
அறியவில்லை...

மற்றவர்களிடம் ஒழுக்கத்தை
எதிர்பார்க்கும் மனம் எம்மிடம்
ஏற்க மறுத்துகிறது
வாழும் உலகில்
நல்லெண்ணங்களை விட்டு
வாழ்கின்றோம் மனிதன்
என்ற பெயரில்...

இறந்த பின் காட்டப்படும்
இரக்கத்தினை இல்லாதவர்களுக்கு
கொடுக்க மறந்து விட்டோம்...
இந் நிலை தொடர்ந்தால் மிஞ்சுவது
மனங்கற்ற சடலங்கள் மட்டுமே...

ஐந்தறிவு படைக்கப்பட்ட ஜீவனிடம்
இருக்கும் மனிதாபிமானம்
ஆறறிவு படைக்கப்பட்ட
மனிதர்களுக்கு இல்லை
மனிதனின் மாற்றம்
மனிதநேயத்திலிருந்து
அன்பால் மட்டுமே மாற்ற இயலும்
அன்பை வேண்டிநிற்கும்
இதயங்களிடம் அறநெறியாய்
வாழ்வோம் வாழப் பழகுவோம்



சி. டிலக்ஷிகா
கொச்சிக்கடை

## தேவதையும் மகளும்...

தேவதையும் மகளும்;
ஒன்றாகவே பிறந்தனர்;
ஆயினும் பிரித்தறியப்;
பெரும் பிரயத்தனம் வேண்டும்;

சிரிக்கும் போதினில்;
தேவதை தோற்கிறாள்;
அழும் போதிலும்
அவளே வெல்கிறாள்;

செந்தேன் மொழியைத்;
தேவதை கற்பித்தாளோ;
சிணுங்கல் ஒலியை;
யாரிடம் கற்றாளோ;

செல்லப் பிடிவாதத்தில்;
சொக்கும் தேவதை;
கன்னக்குழியில் என்னை;
வீழ்த்தும் கவிதை;

அள்ளக் குறையா;
எழிலுடன் பிறந்தவள்;
ஆசை தீரவே;
மடியில் வாழ்பவள்;

கோபிக்கும் அழகோ;
கோடி ரூபாய் பெறும்;
பிரஸ்தாபிக்கும் தோரணையில்;
பிரளயம் உருவாகும்;

சில்மிஷங்கள் செய்யும்;
சில்வண்டின் ரீங்காரமோ;
செந்தாமரைகள் கொண்டு செய்த;
சந்தனச்சிற்பத்தின் சாயலோ?;

சிறகின்றிய தேவதையோ ;
சுற்றுகின்ற ராட்டினமோ;
சந்திரனும் சூரியனும்;
சேர்ந்தே இருக்கின்ற
இந்திரலோகமோ?;

தேவதைகளின் சிறகாய்;
மாறிப்போய் விட்டாளோ;
தேவகானம் சொட்டும்
செவ்விதழ் உனதோ?

சராமாரியாய் சந்தேகங்கள்;
பெருவாரியான கேள்விகள்;
அவிழாத முடிச்சுக்கள்;
அகலாத கொள்ளைச் சுகங்கள்;

தேவதையும் மகளும்;
ஒன்றாகவே பிறந்தனர்;
ஆயினும் பிரித்தறியப் பெரும்;
பிரயத்தனம் வேண்டும்;



Dr.ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

## மறக்க மறந்த காவியமே!

நீ சிரித்தாய்
நான் கண்டேன்..

நடக்கையில்
சிரித்தாய்.... கண்டேன்.
நண்பர்களோடு சிரித்தாய்...
நண்பகலும் சிரித்தாய்..
மழையை காட்டி இரசித்தே
என் மனதின் ஓரம் சிரித்தாய்...

நீ தூக்கத்தில் சிரிப்பதாய் ஒரு நாள்
என் தூக்கத்தில் நான் கண்டேன்...
மறு கணமே உன் மேல் மெல்ல
காதல் கொண்டேன்..

ஒரு நாள் மட்டும் நீ என்னை கண்டு
மறந்து போய் சிரித்தாய்.
நான் உனை மறக்க மறந்ததை
உணர்ந்த தருணம் அது ..

அப்படி இப்படீனு இருந்த இதயம்
அக்கணமே இப்படிக்கு இதயம்
ஆயிற்று.



ப. வாண்நிலவன்
யாழ்ப்பாணம்.

## இறைத் தூதர் பற்றி...

1)இறைத்தூதர் அவர்கள் எந்த மாதம் பிறந்தார்கள்? ரபீவுல் அவ்வல் மாதம்

2)இறைத்தூதர் அவர்கள் பிறக்கும் போது யாருடைய ஆட்சி முடிவுக்கு வந்தது? (அனூ ஷேர்வா )என்ற கிஸ்ராவின் ஆட்சி.

3)ஆமினாவுக்கு பிறகு ஒரு வாரம் கழித்து இறைத்தூதருக்கு பாலூட்டிய முதல் பெண் யார்? ஸுவைபிய்யா. (அபூ லஹபின் அடிமைப் பெண்)

4)நபி (ஸல்) அவர்கள் 12வயதாக இருக்கும்போது அபூ தாலிபுடன் வியாபாரத்திற்கு சென்ற தேசம் எது? ஷாம் தேசம்.


6)நபி ஸல் அவர்கள் நபித்துவத்தின் பின் மக்காவில் வாழ்ந்த காலம்?
13ஆண்டுகள்

7)மதீனாவில் நபியவர்கள் வாழ்ந்த காலம்?
10ஆண்டுகள்.



எம்.ஆர்.எப். அஸ்கா
வல்பலுவ்வ

## அப்பா.



தங்கியிருந்த தாயின் கருவறை
புனிதமானது அதே போல நாம்
விழும் போது தாங்கிக் கொண்ட
அப்பாவின் தோள்களும்
புனிதமானது.......

நான் ரசித்த அழகிய
இசை என் அப்பாவின்
இதயத்துடிப்பு........

செதுக்கப்பட்ட ஒவ்வொரு
சிலையும் கடவுள் என்றால்
எனக்கு அப்பாவும் கடவுள்
தான். அடித்தாலும் அன்பால்
அணைக்கும் கடவுள் அப்பா.....

என்னை தூக்கி அணைக்க
முடியாமல் நீ தவித்த
தவிப்பை உன் கண்கள்
எனக்கு காட்டிக்
கொடுக்கிறது அப்பா.

தன் தலைக்கு மேலே
உட்கார வைத்து நம்மை
அழகு பார்க்கும் அப்பாவை
நாம் ஒரு போதும் தலை குனிய
வைத்து விடக் கூடாது.

அம்மாவின் அன்பு கடல்
அலை போல வெளிபட்டுக்
கொண்டே இருக்கும்..
ஆனால் அப்பாவின் அன்பு
நடுக்க கடல் போன்றது
வெளியே தெரியாது
ஆனால் ஆழம் அதிகம்.

நாம் தவறான பாதையில்
சென்றால் ஓடி வந்து
நம்மை தடுக்கும் முதலாவது
உறவு அப்பாவாக தான்
இருக்க முடியும்...!!!

தன் மூச்சு உள்ள வரை
எனக்காக நேசிப்பவர்...
எனக்காக தான்
சுவாசிப்பவர் என்
அப்பா மட்டும்..!

தாய் நமக்காக
கஷ்டப்படுவதை நம்மால்
கண்டு பிடித்து விட முடியும்.
ஆனால் தந்தை நமக்காக
கஷ்டப்பட்டதை மற்றவர்கள்
சொல்லித் தான் பிற்காலத்தில்
தெரிய வரும்.....



சஜாத் சன்சுல் பிக்ரி
மூதூர்.



# கல்வி மூலம் எதிர்பார்க்கப்படும்
# மானுடப் பண்புகளும் இலங்கையின் கல்வி முறைமையும்”

தொடர் - 05


**A. S. Mohammed Fousi**
B.A.Hons, M.A,PGDE
Teacher Educator (SLTES)
Lecturer - Uva NCOE Bandarawela.




“தேர்ச்சி என்பது ஏதேனும் ஒரு விடயத்தில் மாணவன் பெறுகின்ற அறிவு (Knowledge), மனப்பாங்கு (Atitute), திறன் (Skills) நிரம்பிய வாழ்நாள் முழுவதும் பயன்படுத்துகின்ற ஆளிடைத் திறன்களுடன் கூடிய பயிற்சி (Practice) ஆகும்”

இதுவே 'KASP' முறைமை எனப்படுகிறது. 'வெப்ஸ்டர்'(The Webster)என்றஅகராதி, தேர்ச்சி என்பதற்கு “திறன்மிக்க, பொருத்தமான, சரியான தகைமைகள்” எனவிளக்கமளிக்கிறது. அவுஸ்ரேலிய கல்வித்தர மீளாய்வு ஆணைக்குழுவின் (Quality Education Review Committee) கருத்துப்படி,“தேர்ச்சி என்பது ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைவதற்காக அறிவு, திறன் ஆகியவற்றை சரியான முறையில் பாவிக்கும் திறமை” எனக் கூறப்பட்டுள்ளது. சுருக்கமாகக் கூறுவதாயின் “தரப்பட்ட ஒரு செயற்பாட்டை ஆற்றுவதற்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கே தேர்ச்சி எனலாம்.”

இத்தகைய தேர்ச்சிகள் மூலம் மாணவர்கள் எய்தக் கூடிய அனுகூலங்கள் ஏராளமானவையாக இருக்க வேண்டும் எனவும் கல்விப் புலம் சார்ந்தோர்களால் எதிர்பார்க்கப்படுகின்றது. பாடசாலை கற்றல் - கற்பித்தல் சூழலுக்குள் இணைத்துக் கொள்ளப்படுகின்ற ஒரு ஆரம்பக் கல்வி மாணவன், முதன்மை நிலை 01 ( தரம் 1, 2), முதன்மை நிலை 02 (தரம் 3, 4), முதன்மை நிலை 03 (தரம் 5) ஆகிய மூன்று நிலைகளைக் கடந்து இடைநிலைப் பிரிவுக்குள் காலடி எடுத்து வைக்கும்போது சுமார் 152 தேர்ச்சிகளை திருப்திகரமான முறையிலும் சரியான முறையிலும் பெற்றவனாக இருக்கவேண்டும் என்றுதான் இலங்கையின் நடைமுறையிலுள்ள கலைத்திட்டமும் கல்விக் கொள்கையும் அவாவி நிற்கின்றன.

இவற்றைச் சரியான முறையில் பெற்றுக் கொள்ளும் குறித்த மாணவன் இடைநிலை மற்றும் உயர்நிலைப் பிரிவுகளில் தனது சிந்தனை, செயற்பாடு, மொழியாற்றல், தனித்துவ ஆற்றல்கள் என்பனவற்றின் துணையுடன் தனது கல்வியைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும்போது எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுத்து, அவற்றை தைரியத்தோடு வெற்றிகொண்டு, வேலை உலகை நாடிய தனது வாழ்க்கைப் பயணத்தைத் தொடரமுடியும் என்பதுதான் இலங்கையின் கல்வித்துறை எதிர்பார்க்கின்ற அம்சமாகும்.

இதுவெ கல்வினால் எதிர்பார்க்கப்படும் இறுதி இலக்கு மாகும். இவற்றை வைத்துப் பார்க்கும்போது இலங்கையின் கல்வி முறைமைகளினால் மானிடப் பண்புகள் தாராளமாகவே வழங்கப் பட்டுள்ளன எனலாம். அந்தவகையில், பாடசாலைக் கற்றல் - கற்பித்தல் சூழலில் உள்வாங்கப்படுகின்ற மாணவர்கள் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகளை அடைந்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றனர்.

01. தொடர்பாடல் சார்ந்த தேர்ச்சிகள்
02. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்
03. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்
04. வேலை உலகிற்குத் தயார்செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
05. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
06. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துவதும் விளையாட்டும் தொடர்பான தேர்ச்சிகள்
07. கற்றலுக்காகக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தகைய தேர்ச்சிகளை மையமாகக் கொண்ட கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாடசாலை மட்டக் கணிப்பீடு (School Base Assisment -SBA) என்ற முறைமையின் கீழ் முன்னெடுக்கப்படுகின்ற செயற் பாடுகளின் மூலமும் மாணவர்களின் நடத்தைக் கோலத்தில் மாற்றங்களை ஏற்படச் செய்து, நாளைய உலகின் நன்மைகளை நாடக்கூடிய மானுட சமூகமாக இந்த மாணவர் சமூகத்தை உருவாக்குவதென்பது நடைமுறைக்குச் சாத்தி யப்பாடு உடையதாகவே உள்ளது.

இந்த SBA மூலம் குழுச் செயற்பாடு, பேச்சு, வாசிப்பு, எழுத்துப் பரீட்சை, விவாதம், நாடகம் நடித்தல், முதலிய பல்நிலைப்பட்ட விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இவற்றின் மூலம் மாணவர்களின் இயங்கு நிலையிலும் இயல்பு நிலையிலும் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட வாய்ப் புக்கள் உள்ளன. சிந்தனையை ஓரிடத்திற்குள் மட்டும் குவிந்து கிடக்கச் செய்யாது அதனை விரிவுபடுத்தி மாணவர்களது தேடல், சிந்திக்கும் ஆற்றல், தலைமைத்துவத்திற்குக் கட்டுப் படும் பண்பு, தலைமை தாங்கி வழிநடாத்தும் பண்பு, சிறந்த முன்வைப்பு, நடிப்பாற்றல், பேச்சாற்றல், எழுத்தாற்றல், தனியாள் ஆளுமை, தன்னம்பிக்கை, முன்வருதல், பயம், பதற்றமின்மை போன்ற எத்தனையோ மனிதப் பண்புகளும் பழக்கவழக்கங்களும் வெளிக்கொணரப்படுகின்றன.

இவையே குறித்த மாணவன் நாளைய சவால்கள் நிறைந்த உலகினுள் தன் பயணிப்பை பயமின்றி தொடருவதற் கானதோர் உந்துசக்தியாய் அமைந்து விடும் என்று கூறினால் அது மிகையாகாது.

# பொதுமக்கள் நுகர்வை அதிகரிக்கவேண்டிய

# மூதூர் ஹரீஸ் பூங்கா






•MUTUR JMI•



மூதூர் பிரதேசத்தில் சிறார்களின் பாவனைக்கு என்று 2015 ஆம் ஆண்டு கௌரவ அமைச்சர் அதாவுள்ள அவர்களின் NELSIP என்ற திட்டத்தின் பின்னணியில் 8 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அப்போதைய கௌரவ தவிசாளர் ஹரீஸ் அவர்களின் தலைமையில் முன்மொழிப்பு செயற்படுத்தப்பட்ட திட்டமே ஹரீஸ் சிறுவர் பூங்கா.

மூதூர் மட்டக்களப்பு பிரதான வீதியில் பொது மைதானத்தோடு இணைந்தாற்போல் தூரநோக்கு மக்கள் நுகர்விற்கென அமைக்கப்பட்ட இத்திட்டம் உண்மையில் வரவேற்கத்தக்க விடயதானமாகும். பொதுமக்களின் அதீத நுகர்ச்சி, காலநிலை சீர்கேடு, கொரோனா சூழல் என்பன காரணமாக அண்மைக்காலமாக குறித்த சிறுவர் பூங்கா பாவனை நுகர்ச்சி மந்தமாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக பின்வரும் காரணங்களை நுகர்ச்சி, வீழ்ச்சிக்கு காரணமாக அடையாளம் காணமுடிகின்றது.

- பாவனைக்கு உகந்ததல்லாத விளையாட்டு உபகரணங்கள் காணப்படுகின்றமை.
- சிறுவர்களுக்கு உபாதை உண்டாக்கும் விதத்திலான சூழல் அமைப்பு.
- பொது மைதானத்திலிருந்து வருகின்ற உதைப்பந்து, கடினப்பந்துகள் காரணமாக சிறுவர்கள் தாக்கப்படும் சூழல்.
- இயற்கை அழகின்மை பற்றாக்குறை
- புதிய விளையாட்டு உபகரணங்கள் பற்றாக்குறை நிலவுதல்
- புதிதாக அமைக்கப்பட்ட பொழுதுபோக்கு பூங்காவின் கவர்ச்சி.
- வாகன தரிப்பிடமின்மை
- இரவுநேர மின்விளக்குகள் இல்லாமை.

குறிப்பாக இரவு நேரங்களில் ஒளியற்ற நிலைமையே இன்றளவும் காணமுடிகின்றது. இது உண்மையில் அசமந்த போக்காகும். இது பிரதேச சபையின் நிர்வாக ரீதியிலான பலகீனத்தையும், ஆலனித்துவ வள முகாமைத்து வத்தின் பின்னடைவையும் வெளிக்கட்டுவதாகவே உணரமுடிக்கின்றது.

பிரதேச சபையின் மாதாந்த வருமான ஈட்டத்தில் ஒரு பங்கினை ஹரீஸ் சிறுவர் பூங்காவின் மீள் நுகர்ச்சியினூடாக சாத்தியப் படுத்தலாம்.

> “ சிறுவர்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதோடு புதிய விளையாட்டு உபகரணங்களை மீள் நிறுவ வழிவகை செய்வதோடு சிறுவர்களை கவர்வதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி மீள் நுகர்சிக்கு உகந்தாற்போல் ஹரீஸ் சிறுவர் பூங்காவை மாற்றியமைக்க துறைசார் தரப்புகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். ”

குறிப்பாக அருகில் அமைந்துள்ள விளையாட்டு மைதானம், மட்டக்களப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள குறித்த சிறுவர் பூங்கா மிகவும் சாதகமான வாய்ப்பாக உள்ளது. மழை காலங்களில் இந்தப் பூங்காவில் நீர் தேங்கி நிற்கும் துரதிஷ்டவசமான நிலையும் உண்டு.

மேற்படி காரணங்கள் ஒருபுறம் இருந்தாலும் பொதுமக்களின் சொத்தாகிய குறித்த சிறுவர் பூங்கா பாழடைந்த நிலையில் சமகாலத்தில் காணப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவிக் கின்ற சூழல் நிலவுகின்றது. இந்நிலையை மாற்றியமைக்கக்கூடிய பொறிமுறை ஒன்றை வடிவமைக்க பிரதேச சபை தரப்பினரும், அதன் கௌரவ தவிசாளர் அவர்களும் கவனம் குறிக்க வேண்டும் என்பதனை முத்திதழ் சார்பில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

குறிப்பாக சிறுவர்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதோடு புதிய விளையாட்டு உபகரணங்களை மீள் நிறுவ வழிவகை செய்வதோடு சிறுவர்களை கவர்வதற்காக உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி மீள் நுகர்சிக்கு உகந்தாற்போல் ஹரீஸ் சிறுவர் பூங்காவை மாற்றியமைக்க துறைசார் தரப்புகள் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தேடல் தொடரும்....

## உதவிப் பிரதேச செயலாளராகக் கடமையேற்பு



பொலன்னறுவை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக பதவி வகித்து, கடந்த பெப்ரவரி 07 முதல் எமது மூதூர் பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராக தனது கடமைகளை ஜூனைட் அல் அமீன் (SLAS) அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார்

## வருடாந்த Naduteevu Premier League (NPL) தொடர்



வருடாந்தம் நடாத்தப்படும் NPL தொடரானது இம்முறை நடுத்தீவு தி/மூ/ சதாம் வித்தியாலயத்தின் ஸ்தாபகரும், அதிபருமாகிய இஸ்ஸத்தீன் அவர்களின் ஞாபகர்த்தமாக நடாத்தப்பட்டது.

இந்நிலையில் இம்முறை நடைபெற்ற சுற்றுத்தொடரில் இரண்டாவது முறையும் செஞ்சரி கிட்டர் அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

## நூல்கள் அன்பளிப்பு



பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஃரூப் அவர்களின் 2021 ஆம் ஆண்டுக்கான பண்முகப் படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் மூதூர் அக்கரைச்சேனை நூலகத்திற்கு ரூபா 100,000.00 பெறுமதியான நூல்களை அக்கரைச்சேனை கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகத்திற்கு கடந்த 2022.01.28 திகதி அன்று கையளிப்பு செய்தார்.

## புதிய மாணவர்கள் வரவேற்பு TALENT International School



2022 ஆம் ஆண்டுக்கான டலன்ட் சர்வதேச பாடசாலையின் புதிய மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு பாடசாலையின் பணிப்பாளர் டி.எம்.சர்ஜூன் அவர்களின் தலைமையில் இன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம்.ஏ.அறூஸ் அவர்களும் பிரதி கல்வி பணிப்பாளர் வீ.எம்.லாபீர் அவர்களும் பிரதி கல்வி பணிப்பாளர் எம்.எம்.அப்பாஸ் அவர்களும் பாடசாலையின் பணிப்பாளினி முஜாஹிதா ஆசிரியையும், முசௌமி ஆசிரியர், றிப்கான் ஆசிரியர், முஹாஜிர் ஆசிரியர், பாடசாலை முகாமைத்துவ குழு உறுப்பினர் ஆசிரியை நஸ்ரின் தௌபீக் அவர்களும் பாடசாலையின் SDEC உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## வருடாந்த கௌரவிப்பு நிகழ்வு 2022




தி/மூ/அல்-மினா மகா வித்தியாலயத்தில் இருந்து 2011-2022 வரை உயர்தர பிரிவில் பல்கலைக்கழகம் மற்றும் கல்வியல் கல்லூரிக்கு தெரிவாகி பட்டதாரிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று பாடசாலை அதிபர் எச்.எம்.நிஹார் அவர்களின் தலைமையில் பாடசாலை வெளியக அரங்கில் நடைபெற்றது. இதன்போது 21 பட்டதாரிகள் கௌரவிப்பு செய்யப்பட்டனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் எம்.எம்.ஜவாத் நளீமி அவர்களுடன் முன்னாள் அதிபர் ஏ.எச்.பஷீர், மத்திய கல்லூரி அதிபர் எஸ்.என்.முஹீர் மற்றும் ஏனைய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், SDC, OBA மற்றும் பெற்றோர்கள், மாணவர்கள் கலந்து சிறப்பித்தனர்.

## அந்நுஸ்ரா முன்பள்ளி மாணவர் வரவேற்பு நிகழ்வு




மூதூர் நெய்தல் நகர் அந்-நூஸ்ரா பாலர் பாடசாலையின் 2022 ஆண்டுக்கான முன்பள்ளி மாணவர்களை வரவேற்கும் ஆரம்ப நிகழ்வு AN-NUSRA COMMUNITY DEVELOPMENT CENTRE ன் தலைவர் இர்பான் அவர்களின் தலைமையில் இன்று நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது பிரதம விருந்தினராக மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஹில்மி பாவா அவர்களும், கௌரவ விருந்தினராக மூதூர் பிரதேச சபை தவிசாளர். எம்.எம்.ஏ.அறூஸ், முன்பள்ளி பொறுப்பாசிரியர் என்.எம்.லாபீர், கிராம அபிவிருத்தி சங்கத்தலைவர், பள்ளிவாயல் தலைவர், மற்றும் பலர் கலந்து சிறப்பித்திருந்ததோடு கல்வியில் கால்தடம் பதிக்கும் புதிய மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## அக்கரைப்பற்று புகைப்பட திருவிழாவில் மூதூர் புகைப்பட கலைஞர் மூன்றாம் இடம்



வருடா வருடம் Club Photo Ceylonica க்காவினால் நடாத்தப்படும் கிழக்குமாகாணம் மற்றும் வடமாகாண புகைப்படக் கலைஞர்கள் பங்குபற்றிய அக்கரைப்பற்று புகைப்பட திருவிழாவில் திறந்த பிரிவில் மூதூரை சேர்ந்த புகைப்பட கலைஞர் ஏ. எல்.எம்.ரசீம் அவர்களது புகைப்படம் மூன்றாமிடத்தை பெற்றுக் கொண்டது.

இவ்விடத்தைப் பெற்றுக்கொண்டமைக்கு மூதூர் சார்பிலான முத்திதழ் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

Visit Our Page



## விசேட தேவையுடையவர்களுக்கான சக்கரநாட்காலி வழங்கிவைப்பு



அலிஅக்பர் யாசிர் அவர்களின் வேண்டுகோளுக்கு அமைவாக அல்ஹிக்மா பௌண்டேசனினால் மூதூரில் உள்ள விசேட தேவையுடைய 11 நபர்களுக்கு சக்கர நாட்காலிகள் 14.01.2022 கடந்த வெள்ளிக்கிழமை தி/மூ/தாருல் ஜன்னாஹ் வித்தியாலயத்தில் வழங்கி வைக்கப் பட்டது.

இதில் அந்நிறுவனத்தின் உயரதிகாரி நிஸ்புல்லாஹ் அவர்களும் மூதூர்பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அறபாத் அவர்களும் மற்றும் மூதூரை பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கிய சமூக அமைப்புக்களைச் சேர்ந்த பல சமூக ஆர்வலர்களும் கலந்து சிறப்பித்தனர்.

## கபில நுவான் அத்துகொரல அவர்களினால் மூதூரில் அபிவிருத்தி திட்டம்

பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு தலைவர் கபில நுவான் அத்துகொரல அவர்களின் நேற்றைய மூதூர் விஜயத்தின் போது

- தி/ மூதூர் அல்ஹிதாயா பாடசாலையின் அனர்த்த பாதுகாப்பு மையம் திறப்பு விழா.
- மூதூர் சுகாதார பிரிவுக்கும் வளங்கள் தொடர்பான கலந்துரையாடல்.
- மூதூர் பிரதேசத்தில் இருக்கும் வறிய நிலையில் உள்ள 360 பேருக்கு வாழ்வதார உதவிகள் வழங்கப்பட்டன.
- பல மில்லியன் பெறுமதியில் மூதூர் ஜாயா வீதியில் இருக்கும் பஸார் பள்ளி வீதி அங்குரார்ப்பண நிகழ்வு.



என்பன பொதுஜன பெரமுன அமைப்பாளர் எஸ்.எம்.எம்.முபாரக் மற்றும் கட்சியின் முக்கிய உறுப்பினர்களின் பங்குபற்றுதலோடு கடந்த ஜனவரி 11 இல் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது.

## வேதத்தீவு கூபா பாடசாலைகளான தளபாடங்கள் கையளிப்பு




மூதூர் YMMA நிருவாகத்தினரின் ஏற்பாட்டில் வேதத்தீவு கூபா பாடசாலைக்கு தளபாடங்களும் மற்றும் சில விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்ட இந்நிகழ்வில் அகில இலங்கை YMMA யின் தலைவர் பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டார்.

இந்நிகழ்வில் Centrel YMMA நிருவாகத்தினரும், திருகோணமலை மற்றும் தம்பலகாமம் YMMA நிருவாகத்தினரும், மூதூர் பலநோக்கு கூட்டுறவு தலைவர், மூதூர் கிரிக்கட் வாரியத்தின் தலைவரும் கலந்து சிறப்பத்தமை குறிப்பிடத்தக்கது.

## சேவைநலன் பாராட்டு வி.எம்.முஸம்மில் அதிபர்

மூதூர் ஜாயா வித்தியாலய முன்னாள் ஆசிரியரும், அதிபருமான ஜனாப்.வரிசை முகம்மது முஸம்மில் (அதிபர்) அவர்கள் தனது 32 வருட அரச கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுச்செல்வதை தொடர்ந்து இவரது கல்விச் சேவை நலன் பாராட்டு விழா ஜாயா வித்தியாலய புதிய அதிபர் ஜனாப் ஜே.எம்.பாயிஸ் அவர்கள் தலைமையில் பெற்றார்கள் மற்றும் ஆசிரியர்கள் ஏற்பாட்டில் கடந்த 06.01.2022 அன்று மூதூர் பேர்ல் கிராண்ட் மண்டபத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது.




## சிறந்த அபிவிருத்தி செயற்பாட்டுக்கான விருது மூதூர் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு.



கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டி ஏறாவூர் வடமேற்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் சௌபாக்கிய மண்டபத்தில் கடந்த (06) நடைபெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கல் நிகழ்வில் சிறந்த அபிவிருத்தி செயற்பாட்டுக்கான விருது மூதூர் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்திற்கும், சிறந்த கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தருக்கான விருது மூதூர் பல்நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கூட்டுரவு அபிவிருத்தி உத்தியோகத்தராக பணியாற்றும் **கிண்ணியாவை சேர்ந்த ஜனாப் ஏ.எச்.அஜ்வது** அவர்களுக்கும் கிடைக்கப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் கையளிப்பு



அண்மையில் தோப்பூர் பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட உயர்தர கணித விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் விஞ்ஞான துறை மாணவிகளுக்கான கடந்த கால வினா தொகுப்பு Asian Pacific Alliance (Japan - Sri Lanka) நிறுவனம் ஊடாக இன்று பாடசாலையில் வைத்து கையளிப்பு செய்யப்பட்டது.

## SEGUA நூலகம் திறந்து வைப்பு

நாடளாவிய நிர்வாக சேவை மற்றும் போட்டி பரீட்சைகளுக்கான நூல்களை கொண்ட நூலகம் மூதூர் தென்கிழக்கு பட்டதாரிகள் சங்கத்தின் அனுசரணையுடன் கடந்த (12.02.2022) அன்று உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப் பட்டது.

இந்நிகழ்வில் அதிதிகளாக கௌரவ தவிசாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், முன்னாள் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள், அதிபர்கள், விஷேட அதிதியாக சிராஜ் மஷ்ஹூர் மற்றும் இலக்கிய ஆர்வலர்கள், தென்கிழக்கு பல்கலைக்கழக பட்டதாரிகள் என்று பலரும் கலந்து சிறப்பித் தனர்.





## நூல் அறிமுகம்

- அபூ அதீனா -



**நூலின் பெயர் :**
சமூக ஊடகங்களுக்கான ஃபிக்ஹு
**ஆசிரியர் (அரபியில்) : உமர் உஸ்மான்**
**(தமிழில்) : முனைவர் பீ.எம்.எம். இர்பான்**

"எவர்கள் ஈமான் கொண்டுள்ளோரிடையே மானக்கேடான விஷயங்கள் பரவ வேண்டுமெனப் பிரியப்படுகிறார்களோ, அவர்களுக்கு நிச்சயமாக இம்மையிலும் மறுமையிலும் நோவினை செய்யும் வேதனையுண்டு அல்லாஹ் (யாவற்றையும்) அறிகிறான். ஆனால் நீங்கள் அறியமாட்டீர்கள்" (அந்நூர் - 19)

உலகின் அன்றாட தகவல்களை கண்முன் காண்பதற்கு எளிதான, மனித வரலாறு முன்னெப்போதும் கண்டிராத ஓர் காலப்பிரிவில் நாம் வாழ்கிறோம். குறுகிய வட்ட நட்புக்கள் இன்று சர்வதேசம் வரை தொடர்ந்திருககிறது. முன்பைவிட அதிக நபர்களுடன் இப்போது இணைக்கப்பட்டுள்ளோம், அதிக வேகத்தில் உலகெங்கிலும் தொடர்பாட முடிகிறது. அதைவிடவும் நேரடியாகவும் கண்டு இரசிக்கமுடிகிறது. இம்மாற்றங்கள் நம்வாழ்வை மாற்றிவிட்டன.

"சமூக வளைத்தளங்கள்" தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது. மனிதன் யோசித்து முடிப்பதற்குள் அவை இன்று சமூக வளைத்தளங்களில் வாக்கியங்களாக, ஆடியோ, வீடியோக்களாக பதிவிடப்பட்டு விடுகிறது.

இத்தகைய சூழலில் காலமாற்றங்களைக் கடந்து நிற்கும் இஸ்லாத்தின் போதனைகளை நடைமுறைப் படுத்துதல், புரிந்துகொள்ளுதல், பயன்பாட்டைக் கையாளுதல் எப்படி? என்பதை "சமூக ஊடகங் களுக்கான ஃபிக்ஹு" எனும் இம்மொழிபெயர்ப்பு நூல் கவனம் செலுத்துகின்றது.

அறியாமைக் காலத்து அல்குர்ஆனிய வசனங்கள் உணர்த்தி நிற்கின்ற மகத்தான பணியினை இன்றைய காலத்தில் எழுதில் புரிந்துகொள்ள முடியுமாக இந்நூல் பேசுகிறது. சமூக ஊடகங்களும், டிஜிட்டல் தொழில்நுட்பங்களும் நமது அன்றாட வாழ்விலும், குடும்பங்களிலும், சமூகங்களிலும், ஆன்மீகத்திலும் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை இந்நூல் ஆழ்ந்து கவனிக்கிறது.

சமூக ஊடகங்கள் எல்லாத் தரப்பிலும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்ற இக்காலங்களில் இஸ்லாமியப் போதனைகளின் புள்ளிகளை இணைத்து, இத்தொழில்நுட்பங்களை எவ்வாறு சிறப்பாகப் பயன்படுத்துவது என்பதைப் புரிந்துகொள்ள உதவும் நடைமுறை வழிகாட்டலை வழங்குகிறது.

தொழிநுட்பம் இல்லாத, பயன்படுத்தப்படாத ஒரு காலத்தில் சொல்லப்பட்ட இறைவாக்குகளும், நபிமொழிகளும் தொழிநுட்பத்தின் உச்சத்தையெட்டிய இக்காலத்திற்கு எவ்வளவு தூரம் பொருந்திப் போகின்றது என்பது, இந்த மார்க்கத்தின் எதிர்வுகூறல், நித்திய நிலைத்தன்மை என்பதை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றது.

மனிதனின் கையில் கிடைக்கப்பெற்ற முழுவடிவிலான வேத வசனங்களும், போதுமானளவு நபிவாக்குகளும் சமூக ஊடகப் பயன்பாடு விவகாரங்களைக் கையாள்வதில் எம்மை நெறிப்படுத்தி யிருப்பதனை இந்நூலில் ஆதாரப்படுத்தப்பட்டுள்ள சான்றுகள் மூலம் நிச்சயம் கண்டுகொள்ளலாம்.



## கே.எம் நவாஸ் ஆசிரியர்

# சேவை நலன் பாராட்டு

**ஹபீப் முஹம்மட் மற்றும் ஆமினா உம்மா ஆகிய தம்பதிகளின் அன்பு புதல்வனாக 1961.10.14 ஆம் திகதி உதயமானார் கே.எம் நவாஸ் ஆசிரியர்.**

இவர் தனது ஆரம்ப கல்வியை 1966 ஆம் ஆண்டு ஷாஹிரா வித்தியாலயம் என்றழைக்கப்பட்ட தற்போதைய அல்மினா வித்தியாலயத்திலும் உயர் நிலை கல்வியை 1975 ஆம் ஆண்டு மூதூர் மத்திய கல்லூரியிலும் தொடர்ந்தார். இவர் சிறு வயது முதல் சமூக பணிகளில் அதீத ஈடுபாடுள்ளவராகவும் காணப்பட்டார்.

மூதூர் அல்மினா மகாவித்தியாலயத்தில் 1990 ஆம் ஆண்டு 09-20 ஆம் திகதியில் முதல் நியமனம் பெற்றார். அல்மினா பாடசாலையில் தனது 20 வருட கால ஆசிரியர் சேவையின் பின்னர் 2011.01.01 மூதூர் அல் ஹைரியா வித்தியாலயத்தில் இணைந்து கொண்டார்.

பிள்ளை நேய பாடசாலை என்ற தலைப்பில் மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட போட்டியில் முதலிடமும், பாடசாலையில் சிறந்த செயற்திட்டம் என்ற தொனிப்பொருளில் சுற்றுலா சேமிப்பு என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தினார் இவரது இந்த திட்டம் தேசிய ரீதியில் நான்காம் இடத்தையும் பெற்றது.

Kids எனும் சிறார்களுக்கான விளையாட்டு நிகழ்வில் மூதூர் வலயத்தில் மூன்று இடங்களை பெற்று மாகாணமட்டத்தில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தி தந்த பெருமையும் இவரையே சாரும்.

இவரது கல்வி சேவைக்கு அப்பால் பெரியபால ஜூம்ஆப் பள்ளிவாயல் நம்பிக்கையாளர் சபையில் 12 வருடம் பொருளாலராகவும், 08 வருடம் தலைவராகவும் மற்றும் 2015 முதல் அனைத்து பள்ளிவாயல் சம்மேளனத்தில் செயலாளராகவும் சேவையாற்றி வருகின்றார். அத்தோடு பல சமூக அமைப்புக்களில் முக்கிய பொறுப்புகளில் சேவையாற்றியவையும் குறிப்பிடத்தக்கது.

## 06 ஆம் பக்கத் தொடர்ச்சி... *ஆக்கத்திறன்*

நீங்கள் ஒவ்வொருவரும் ஆக்கத்திறன் கொண்டவர்களே. எளிமையில் மட்டுமல்ல சிக்கலானவற்றிலும் வல்லமை காட்டும் தொழில்நுட்பத் திறன் கொண்ட சாதனங்களை உருவாக்கவும் உங்கள் ஆக்கத் திறனே அவசியமானவை.

நீங்கள் ஒவ்வொருவரும் தத்தமது ஆக்கத்திறனை வெவ்வேறு துறைகளில் புதுப்புது உற்பத்திகளாக வெளிக்கொண்டு வாருங்கள். உங்கள் உற்பத்திகளால் அதிகார வர்க்கத்தினரால் உற்பத்தி செய்யப்படும் ஏழ்மை சமூகத்தை நிச்சயம் காப்பாற்றி அடிமைக்கு விடுதலை அளிக்க முடியும். நீங்களுமாக இருந்தாலும் தொழிற்நுட்பத் திறன் படைத்த சாதனங்களைக் கொண்டு தொழிற்சாலைகளை நிறுவிய போதிலும் உலக ஆளும் வர்க்கத்தினர் போலல்லாமல் எல்லோருக்கும் சிக்கலாகத் தெரிகின்ற விடயங்களில் மாத்திரம் தொழில்நுட்பத் திறனைப் பயன்படுத்தி அதிலும் வல்லமை காட்டுவதுடன் அதிகமான மனித ஆக்கத்திறன்களுக்கு வாய்ப்பளிக்கும் படியான களம் அமைத்து அடிமைச் சமூகத்தினரிடமிருந்து அத்துமீறு பறித்தெடுக்கப்படும் வளச் சுரண்டல்களுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள். ஆக்கத்திறனே அற்புதமான அடிப்படையான ஆரோக்கியமான திறன் என்பதையும் எளிமையானதிலும், சிக்கலானதிலும் வல்லமை காட்ட இது ஒன்றே அவசியமானதும் போதுமானதெனவும் புரிந்து கொண்டு இலக்குகளுக்கு அப்பாலும் முன்னோக்கி நகருங்கள்.

## 19ஆம் பக்கத் தொடர்ச்சி... *சிறுகதை*

சில நிமிடங்களில் பின் குறித்த அந்தத் தாதி வெளியே வந்தாள். அவளிடம் ஓடிச் சென்று “மின்பாவிற்கு என்ன? ஒன்னும் இல்லத் தான?” என்று வினவினான். அதற்கு அவள் “என்ன ஒன்னும் இல்ல? தள்ளி நில்லுங்க பாப்பம் டொக்டர் வரட்டும்.” என்று சொல்லி வைத்தியரின் அறைக்குச் சென்றாள்.

வைத்தியர் சலீமைக் கடந்து சென்று பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்ட அறைக்குள் போய் மீண்டும் வெளியே வந்தார். “என்ன டொக்டர்? ஒன்னும் சொல்றாங்க இல்ல? என்ன என்டு சொல்லுங்க ப்ளீஸ்” என்று மன்றாடினான்.

“பேபி இஸ் டெட் அயம் ஸோரி.”

அந்த வார்த்தைகளின் அர்த்தம் புரிந்த மறுகணம் மண்டியிட்டு கீழே விழுந்தான் சலீம். கழுத்து வெட்டப்பட்ட பறவை போல துடித்துத் துடித்து அழுதான். எனக்கு ஏன் இப்படி நடந்தது? நான் என்ன பாவம் செய்தேன்? வலி என்று தானே வந்தோம் இப்படி கொன்று விட்டார்களோ. ஆறு மாதங்கள் நன்றாகத் தானே இருந்தது என்றெல்லாம் சொல்லிச் சொல்லி அழுது தீர்த்தான்.


அந்த நாள் முதல் மின்பா ஒரு கல்லைப் போலவே மாறிப் போனாள். எந்த உணர்வுகளையும் காட்டிக்கொள்வதே இல்லை. சிலவேளைகளில் உறக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுந்து “அந்த மஞ்சள் டெப்லட் அது தான். அது தான்.” என்று சொல்லி விம்மி விம்மி அழுவாள். சலீம் அவளைக் கட்டியணைத்து எதுவும் பேசாமல் அவள் அழட்டும் என்று விட்டுவிடுவான். அவள் அழும் போது அவளின் துக்கத்தின் பாரம் குறைவது போலவே அவனுக்குத் தோன்றியது. அவ்வாறு அழுதுகொண்டிருக்கும் போது ஒரு முறை “புள்ளக்கி பேர் வெச்சி அடக்கம் செஞ்சீங்களா? என்ன பெயர் வெச்சீங்க?” என்று முதல் முறையாகக் கேட்டாள்.

“பிலால்” என்றான்.

“ம்..” என்று மட்டும் சொல்லி முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

பிலால் என்றால் நீண்ட நாட்களின் பின் பெய்யும் மழை என்றும் ஒரு பொருள் இருக்கிறது. பல வருடங்கள் கழித்து எண்ணற்ற நேர்ச்சைகளின் பின் உருவான சிசு அல்லவா பிலால். பாவம் தன் தாய் தந்தையைக் காணாமலே மூச்சடங்கிப் போனான் அவன்.


# முகநூல் முகப்பாத்தி













ஒருவர் கையை எத்திசையிலும் வீசும் சுதந்திரம், இன்னொருவர் மூக்கை அது தொடாத வரையில் தான்!
அந்த ஆடை தான் அவனது கலாச்சாரம் என்றால் , அதை தட்டிக்கேட்கும் உரிமை ஐக்கிய நாடுகள் சபைகளுக்கே இல்லாத போது.
மூடிய ஆடைகள் தான் முஸ்லிம் பெண் ணின் சுதந்திரம் எனும் போது. அதில் மூக்கை நுழைக்கும் தகுதி, எந்த நபருக்கும் கிடையாது.
கலாச்சார சீருடைகள் அது அந்தந்த சமூகத்தின் உரிமை,அதில் தலையிடும் உரிமை இன்னொரு சமூகத்திற்கு கிடையாது.
சமமாக மனிதனை மதிக்கிற பண்பும், பிறர் தனிப்பட்ட வாழ்க்கையில் மூக்கை நுழைக்காமல் இருப்பதும், ஒருவரின் சுதந்திரத்தில் மற்றவர் தலையீடு செய் யாமல் இருப்பதும், இவை தனி மனித ஒழுக்கம்...!!
இந்த அடிப்படை அறிவு கூட இல்லாத வர்களை நம்பி கல்விக் கூடங்களை ஒப்படைப்பது சாபக்கேடு!
இப்படியான கல்விக் கூடங்களில் வழி நடாத்தப்படும் எதிர்கால சமுதாயம், "நிர்வாணக் கோலத்தில் தான்".. வலம் வரப் போகிறார்கள்!!





உணவுப் பாதுகாப்பு தொடர்பாக இறைச்சி கடை உரிமையாளர்களுடனான கலந்துரையாடல்.

அறுவைச்சாலையின் சுகாதாரம், இறைச்சியினை கொண்டு செல்லல் மற்றும் இறைச்சி கடைகளில் இருந்து வினியோகித்தல் வரை முறையான உணவுப் பாதுகாப்பு மற்றும் சுகாதார நடைமுறைகளை பேணல் தொடர்பாக Dr.MBM.Hilmy M.O.H மூதூர் பிரதேச சபை கௌரவ தவிசாளர் MAA.Aroos சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோத்தர்கள் மற்றும் மூதூர் பிரதேச சபையின் தொழிநுட்ப உத்தியோகத்தர் இணைந்து மூதூர் , தோப்பூர் மற்றும் ஆசாத் நகர் இறைச்சி கடை உரிமையாளர்களுடன் கடந்த 2022.02.08ம் திகதி மூதூர் சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் கலந்துறையாடல் மேற்கொண்டனர்.







மூதூர் தி/ஹுசைனியா வித்தியாலயத்திற்கு அருகில் போக்குவரத்தையும் பொருளாதாரத்தையும் உயர்த்தும் நோக்கில் பாலநகரையும் நெய்தல் நகரையும் இணைக்கும் பாலம் மூதூர் பிரதேச சபை தவிசாளர் கௌரவ எம்.எம்.ஏ. அறூஸ் கௌரவ மூ.பி.ச. உறுப்பினர்களதும் மத்தியகுழுவினரின் வேண்டுகோளின் பேரில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் மூதூர் பிரதேச அபிவிருத்தி குழுத்தலைவருமான எம்.எஸ்.தௌபீக் அவர்களின் முயற்சியால் கட்டப்பட்ட பாலம் இன்று திறப்புவிழா செய்யப்பட்டு மக்களின் பாவனைக்காக கையளிக்கப் பட்டது.




அதிகாலை வேளையிலே
அகமங்கத் தூய்மையுடன்
பதியாளும் அல்லாஹ்வை
பக்குவமாய் தொழுதழுது
துதி செய்து வாழ்ந்திடுவாய்
துயர் விலகக் கண்டிடுவாய்...
நீதி யீசன் நினைவாலே
நித்தமும் நீ இருந்திடுவாய்
சோதனைகள னைத்தும்
சுவனதேசம் செல்ல நீயும்
சாதனமா யுதவிடுமே யங்கு
சுகவாச மெய்திடுவாய்....
உலகமெனு முருண்டையிலே
உயிர்வாழும் காலமெல்லாம்
குலவேறு பாடுகளால்
களையெனச் சுட்டி யெம்மை
கலங்க வைப்பார் கண்களையே
காபிராரும் கயவராரும்
கரமுயர்த்திக் கெஞ்சிடுவோம்
கவலை தீரக் கேட்டிடுடோம்
நரகுலக வுறவினராம்
நயவஞ்சத்தனத்தை விட்டும்
கருணைமிகு யர்ரஹ்மான்
காத்திடத்தான் தொழுதிடுவோம்..






மூதூரின் சிரேஷ்ட எழுத்தாளர் அ.வா.முஃஸீன் அவர்களின் புதல்வர் சர்வதேச ரீதியில் சாதனை!

மூதூரின் சிரேஷ்ட எழுத்தாளரும், இலக்கிய ஆய்வாளரும், ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியருமான அ.வா. முஃஸீன் அவர்களின் புதல்வர் தானிஷ் அஃப்ரிதி VW Art Club இனால் ஒன்லைன் மூலமாக நடாத்தப்பட்ட சர்வதேச மட்டத்திலான கட்டட வடிவமைப்பு தரப்படுத் தலில் முதல் பத்து இடங்களுக்குள் ஒருவராக கணிக்கப்பட்டுள்ளார்.
மேலும் இத்தரப்படுத்தலில் கணிக்கப் பட்டுள்ள 10 நபர்களுள் ஐந்தாவதாக இடம்பிடித்துள்ள ஒரேயொரு இலங்கையராக இவர் விளங்கு கின்றமை சிறப்பம்சமாகும்.
மொரட்டுவ பல்கலைக் கழகத்தின் Architecture பீட மாணவரான இவர் திருகோணமலை இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.




இலக்கிய ஆர்வலர்களின் ஒன்றுகூடல் தோப்பூர் பிரதேசத்தில் இயங்கிவரும் கலை இலக்கியப் பேரவையின் ஒன்றுகூடல் தலைவர் கவிஞர் கிழக்கு வானம் முஸ்தபா மௌஜூத் தலைமைமையில் இன்றைய தினம் மிகச் சிறப்பாக இடம்பெற்றது.
இதன்போது தோப்பூரில் கலைத்துறையை மேம்படுத்த எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.







பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து பொருட்கள் அன்பளிப்பு

மூதூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொது அமைப்புக்களுக்கு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் 2021 ஆண்டுக்குறிய பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் இன்று (16.02.2022) மூதூர் பிரதேச செயலகத்தில் வைத்து உரியவர்களிடம் கையளிப்பட்டது.

இதன்போது மூதூர் பிரதேச சபைத் தவிசாளர் கௌரவ அரூஸ், பிரதேச செயலாளர் முபாறக், மத்திய குழுத் தலைவர் ஜவாத், பிரதேச சபை உறுப்பினர்களான வஹ்ஜித் ஆசிரியர், பைசர், ஜெஸீம், றிபாஸ், ஆப்தீன், நிஸ்மி, உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அறபாத், மத்திய குழுச் செயலாளர் பஸ்றி ஆசிரியர், எனது இணைப்பாளர் மனாப் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முகநூல் முற்றத்துவெளியில்
உங்கள் Facebook ஆக்கங்களும்
இடம்பெற விரும்புகின்றீர்களா...?
#Muththithal #mmv/fb
என்று #(Hastag) செய்யவும்.
மேலதிகத் தொடர்புகளுக்கு :
Muththithal முத்திதழ்
என்ற fb Page
ஐ நாடவும்



# மாணவர் கைவண்ணம்





T.M.THAIQAL
AQSA NATIONAL SCHOOL
KALPITIYA



Jude Roy Airleen.
No/68, School road ,
Thillaiyadi, puttalam







N.M.Inshaf
Grade - 10a
T/Mu/M.c.c





Zarook Zara
Garde 2
T/Mu/Annahar G.M.V





N. Ishan Reesha
T/Mu/MMLC
PalaNagar
Mutur-02


முத்திதழ் மாதாந்த சஞ்சிகையில் உங்கள் விளம்பரங்களும் இடம்பெற விரும்பினால் எம்மை அழையுங்கள்.

0771020030 / 0757575057




## முத்திதழ் மாதாந்த சந்தா விபரம்

நீ.. நான்.. நாம்...

**முத்திதழ் சஞ்சிகை இனிவரும் நாட்களில் நாடளாவிய ரீதியில் விநியோகம் செய்யப்படவுள்ளது.**

மூதூர் மண்ணிலிருந்து வெளிவரும் "முத்திதழ்" மாதாந்த சிற்றிதழை இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற மகிழ்ச்சியான செய்தியை எமது வாசகர்களுக்கு நாம் அறியத்தருக்கின்றோம்.

### இதழ் ஒன்றினை அஞ்சல் மூலமாக பெற்றுக்கொள்ள.

- மாதம் ஒன்றுக்கு – 100.00 ரூபாய்
- 6 மாத சந்தா – 580.00 ரூபாய்
- வருட சந்தா – 1100.00 ரூபாய்

எமது இதழை பெற்றுக்கொள்ள

# 0771663140

என்ற இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துங்கள்.

மின்னிதழைப் பெற்றுக்கொள்ள #Mutur_Online_Library என்ற WhatsApp குழுமத்தை தொடர்புகொள்ளுங்கள்.








# ஒன்லைன் மூதூர் வாசிகாலை

03 ஆண்டு நிறைவை முன்னிட்டு

# சித்திரப் போட்டி

## விண்ணப்பப் படிவம்

பெயர் : ..............................................................

விலாசம் : ..............................................................

மாவட்டம் : ..............................................................

தொ.இல : ..............................................................

பாடசாலை : ..............................................................
*(மாணவராயின்)*

**குறிப்பு :**

இவ்விண்ணப்படிவத்தைப் பூர்த்தி செய்து, வரைந்த சித்திரத்தினை A4 கடித உறையில் இட்டு அருகே தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.




ஒன்லைன் மூதூர் வாசிகசாலை

மூன்று ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தும்

முடிவுத் திகதி 2022-03-30

# சித்திரப் போட்டி

**தலைப்பு**

- ☑ நூல்கள் நல்ல நண்பன்
- ☑ வாசிப்பு கலாசாரம்
- ☑ நூல்கள் பரிசளிப்போம்
- ☑ எழுத்துகளின் பிரபஞ்சம்
- ☑ வாசிப்பு மானிட மூச்சு

**விதிமுறை**

- ☑ மேற்படி தலைப்புகளில் எதாவது ஒரு தலைப்பில் A4 காகிதத்தில் முழுமையாக உள்ளடங்கும் வகையில் வர்ணம் தீட்டிய சித்திரம் வரைதல்.
- ☑ எல்லா வயதெல்லை சார்ந்தவர்களும் பங்குபற்றலாம்.
- ☑ இலங்கையில் எப்பாகத்தில் இருந்தும் இப்போட்டியில் பங்குபற்ற முடியும்.

**அனுப்ப வேண்டிய முறை**

☑ முத்திதழ் சஞ்சிகையின் அட்டைப்பக்கத்தில் காணப்படும் இப்போட்டி நிகழ்ச்சிக்கான விண்ணப்பப் படிவத்தை பூரணப்படுத்தி உங்கள் சித்திர காகிதத்துடன் கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவும்.

**அனுப்ப வேண்டிய முகவரி**

A.C.M. Asmy
Muththithal Director,
Jaya Road, Mutur - 05,
Trincomalee

**குறிப்பு**

தபாலில் அனுப்பும் போது A4 Size அளவிலான கடித உறையில் (Envelop) ல் சித்திரத்தை மடிக்காமல் அனுப்புதல் வேண்டும்.

ayout : sanoostm